இலங்கை மத்திய வங்கி
தகவல் திணைக்களம்

# குறிப்பேடு


21 மலர் 5-6 இதழ் 2002 மே-ஜூன்

23.07.05

## இலங்கையின் பொருளாதார செயலாற்றுகை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார மாதாந்த வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2001 இல் இலங்கையின் பொருளாதார செயலாற்றுகை

**வின்சன்ற் மர்வின் பர்னாந்து**
*பிரதிப் பணிப்பாளர், வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம்*

**அறிமுகம்**

மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற வெளியீடுகளில் மத்திய வங்கி ஆண்டறிக்கை மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. பொருளாதாரப் பகுப்பாய் வாளர்கள், முதலீட்டாளர்கள், உயர்கல்வி பெறுகின்ற பெரும்பாலான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களில் பெரும்பாலானோர் இவ்வறிக்கை தொடர்பில் ஆர்வம் காட்டுகின்றனர். இது சட்டரீதியிலான தேவையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் கௌரவ நிதி அமைச்சருக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப் படுவதொன்றாகும். இது நிதிச் சட்டத்தின் 35 ஆம் வாசகத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடைபெறு வதாகும். இதனடிப்படையில் 2001 ஆம் ஆண்டின் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றுகை தொடர்பாக ஆராய்தல் இவ் விசேட இதழின் நோக்கமாகும்.

மத்திய வங்கி அறிக்கையின் உள்ளடக்கத்தைப் பிரதானமாக நான்கு பகுதிகளின் கீழ் காட்டலாம். இதன் முதற்பகுதி குறிப்பிட்ட வருடத்தின் பொருளாதாரச் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு ஒதுக்கப்படுகின்றது. இதன் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்களில், முழுப் பொருளாதாரம் தொடர்பான மீளாய்வு, தேசிய வருமானமும் செலவும், கமத்தொழில், கடற்றொழிலும் வன வளங்களும், கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக நலன்புரிச் செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை, அரச நிதியியல் கொள்கையும் வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடுகளும், வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலாத்துறை அத்துடன் நிதியியல் துறை ஆகியன பிரதானமான இடத்தை வகிக்கின்றன. வருடாந்த அறிக்கையின் இரண்டாம் பகுதி இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் பற்றிக் குறிப்பிடப் படுவதற்காக ஒதுக்கப்படுகின்றது. இதன்கீழ் 2001 ஆம் ஆண்டின் மத்திய வங்கி ஆண்டறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களில், மத்திய வங்கித் தொழிற்பாடுகளை நவீனமயப்படுத்தல் தொடர்பான சிறப்புக் குறிப்பே மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. மேலும், மத்திய வங்கியின் அனைத்துத் திணைக் களங்களினதும் 2001 ஆம் ஆண்டின் கடமைப் பொறுப்புக்கள் பற்றி அறிந்துகொள்வதற்கு விரும்புகின்ற ஒருவருக்கு இப்பகுதி மிகப் பயனுள்ளதாயுள்ளது. அறிக்கையின் மூன்றாம் பகுதி 2001 ஆம் ஆண்டின் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள், தொழிற்பாட்டு அறிவுறுத் தல்கள், சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்களைக் குறித்துக் காட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் நான்காம் பகுதி மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 2001 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்களைக் குறித்துக் காட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்புக் குறிப்புக்களின் கீழ் எழுதப்படுகின்ற காலத்துக்கேற்ற தலைப்புக்களின் ஊடாக பரந்த அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது. மேலும் புள்ளிவிபர அட்டவணைகளின் ஊடாக கடந்த வருடங்களின் புள்ளிவிபரத் தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் மூலம், அறிக்கையின் முதலாம் பகுதியை பொருளியல் தொடர்பாகக் கற்கின்றவர்களுக்குப் பயனுள்ள விதத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாகவே முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதன்கீழ் பிரதானமான ஐந்து பிரிவுகளின் மீது கவனம் செலுத்தப்படுவதோடு, குறிப்பாக ஒவ்வொரு பிரிவு தொடர்பான பொருளாதார எண்ணக் கருக்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

- பொருளாதார வளர்ச்சியும் பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடும்
- அரச பொருளாதாரத் தொழிற்பாடுகள்
- நாணயம், வங்கிகள் மற்றும் விலை மட்டத்திலான மாற்றங்கள்
- சர்வதேச வர்த்தகமும் வெளிநாட்டு நிதியியலும்
- குடித்தொகை, தொழிற்படை

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும் (Economic Growth) பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடும்**

பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் உற்பத்தி ஆற்றலின் தொடர்ச்சியான வளர்ச்சியாகும். இது சேவைக் காரணி அளவுகளின் அதிகரிப்பு, உற்பத்தித் திறன் காரணிகளில் அதிகரிப்பு ஆகிய விடயங்களின் மூலம் நடைபெறுகின்ற நீண்டகாலச் செயற்பாடொன்றாகும். பொருளாதார வளர்ச்சியானது பெரும்பாலும் தேசிய உற்பத்திப் புள்ளிவிபரங்களின் ஊடாகவே சமர்ப்பிக்கப்படுகின்றது. குறிப்பிட்டதொரு காலகட்டத்தினுள் பொருளாதாரச் செயலாற்றுகையை மதிப்பிடுகின்றபோது, மொத்த உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வளர்ச்சியே முக்கியமான அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு, விலை மாற்றங்கள் நீக்கப்பட்ட, அதாவது பணவீக்கத் தாக்கங்களுக்கு ஒத்திசைவாக்கப்பட்ட உண்மை மொத்த உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வளர்ச்சியே கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. நிலவுகின்ற காரணிச் செலவின் விலைக்கு ஏற்ப கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு மற்றும் தேசிய உற்பத்தி, குறிப்பிட்ட விலைச் சுட்டெண்களிலிருந்தும் குறிப்பிட்ட உற்பத்திச் சுட்டெண்களிலிருந்தும் மதிப்பிறக்கம் செய்யப்படுவதன் மூலமே உண்மை உள்நாட்டு மற்றும் தேசிய உற்பத்தி கணிக்கப்படுகின்றது. (கவனிக்கவும்: கூறப்படுகின்ற விலைச் சுட்டெண்ணால் பிரிக்கப்படுவதன் மூலம் அல்ல) இங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி (GNP) ஆகிய இரண்டு எண்ணக்கருக்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை அடையாளம் காண்பது முக்கியமாகும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது** ஒரு குறிப்பிட்ட நாட்டின் எல்லைகளுக்குள் அல்லது புவியியற் பிரதேசத்தினுள் (உதாரணமாக - இலங்கையினுள்) குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் (உதாரணமாக - இலங்கையில் இது வருடாந்தமும் அதே போன்று காலாண்டு ரீதியிலும் கணிக்கப் படுகின்றது.) உருவாக்கப்பட்ட உற்பத்திகளின் பெறுமதியாகும். (வெளியீட்டு உற்பத்தி முறைகளின் கீழ் இலங்கையில் உற்பத்திகளின் பெறுமதிக்காகச் சேர்க்கப்பட்ட பெறுமானங்களின் பெறுமதிகளே பயன்படுத்தப்படுகின்றது.)

**மொத்தத் தேசிய உற்பத்தி** என்பது, குறிப்பிட்டதொரு காலப்பகுதியினுள் ஒரு நாட்டில் வதிபவர்களுக்குச் சொந்தமான வளங்களிலிருந்து உருவாகின்ற முழு மொத்த உற்பத்திகளினதும் பெறுமதியாகும். இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானத்தைச் சேர்ப்பதன் மூலமே மொத்தத் தேசிய உற்பத்தி கணிக்கப்படுகின்றது. 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் முழு உற்பத்திகளினதும் பெறுமதியைப் பல்வேறு விலைகளின் கீழ் காட்டலாம் (புள்ளிவிபர அட்டவணை 1).

இங்கு சந்தை விலை (Market Price) என்பது உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் உண்மையாகச் செலுத்துகின்ற விலையாகும். நிலவுகின்ற சந்தை விலையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1வது புள்ளிவிபர அட்டவணை

**பல்வேறு விலைகளின் கீழ் 2001 ஆம் ஆண்டின் தேசிய உற்பத்தி**

| தேசிய உற்பத்தி | பெறுமதி (ரூபா பில்லியன்) |
|---|---|
| வர்த்தக விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி | 1,377 |
| நிலவுகின்ற காரணிச் செலவின விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி | 1,228 |
| நிலையான காரணிச் செலவின விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி | 829 |

நிலவுகின்ற காரணிச் செலவின விலையைப் பெற்றுக்கொள்வதற்கு மறைமுக வரிகள் குறைக்கப்பட்டு, உதவு தொகைகள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். நிலவுகின்ற காரணிச் செலவின விலையின்கீழ் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பில் இரண்டு விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஒன்று, உற்பத்தித் தொகையில் அதிகரிப்பாகும். மற்றையது, விலைகளின் அதிகரிப்பாகும். இவ் விலைகளின் அதிகரிப்பை நீக்குவதற்கு நிலவுகின்ற காரணிச் செலவின விலையைக் குறிப்பிட்ட விலைச் சுட்டெண்களிலிருந்து மதிப்பிறக்கம் செய்தல் வேண்டும். மேலும் சில பிரிவுகள் தொடர்பாக குறிப்பிட்ட உற்பத்திச் சுட்டெண்களும் பயன்படுத்தப்படுகின்றன. அப்போது ஏதேனுமொரு அடிப்படை ஆண்டின் விலையின் (1996=100) கீழ், அதாவது நிலையான காரணி விலையின்கீழ் மொத்தத் தேசிய உற்பத்திப் (உண்மைத் தேசிய உற்பத்தி) பெறுமதிகிடைக்கின்றது. நாட்டில் ஏதேனுமொரு ஆண்டினுள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை (Rate of Economic Growth) அளவிடுவதற்காக இந்த உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் வித்தியாசத்தின் நூற்றுவீதமே பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வித்தியாசத்தையும் கவனத்திலெடுக்கலாம் (1 வது வரைபடம்).

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 1980 - 1989 ஆம் காலப் பகுதியினுள் சராசரி வருடாந்தம் 4.2% வீதமாக இருந்தது. 1990 - 1996 ஆம் காலப்பகுதியினுள் இது 5.3 வீதம் வரை சிறிதளவு அதிகரித்தது. ஆயினும், 1997 - 2001 ஆம் காலப்பகுதியினுள் இது 4.0 வீத்ததுக்குக் குறைந்தது. 2001 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் -1.4% வீதமாக இருந்தமையே இதற்கான பிரதான காரணமாகும் (2வது புள்ளிவிபர அட்டவணை).

2வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 1980 - 2001**

| ஆண்டு/ காலப்பகுதி | உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி % |
|---|---|
| 1980 - 1989 | 4.2 |
| 1990 - 1996 | 5.3 |
| 1997 - 2001 | 4.0 |
| 1997 | 6.3 |
| 1998 | 4.7 |
| 1999 | 4.3 |
| 2000 | 6.0 |
| 2001 | -1.4 |


## 2001 இல் பொருளாதார வளர்ச்சி வேகம் எதிர்க்கணியமாவதற்கான காரணம்

1948 இல் சுதந்திரமடைந்ததன் பின்னர் இலங்கைப் பொருளாதாரத்தினுள் எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சிபற்றி அறிக்கையிடப்பட்ட முதற் சந்தர்ப்பமாக, 2001 ஆம் ஆண்டின் -1.4% வீத வளர்ச்சி வேகம் வரலாற்றில் இடம் பிடிக்கின்றது. இதற்கு முன்னர் ஆகக் குறைந்த வளர்ச்சி வேகமான 0.2% வீதம் 1971 கிளர்ச்சி ஏற்பட்ட ஆண்டிலேயே அறிக்கையிடப்பட்டது. பொருளாதாரத்தின் 5% வீதமான நீண்டகால வளர்ச்சிப்போக்கு தற்காலிகமாக விலகிச் செல்வதற்கு இந்த எதிர்க்கணிய வளர்ச்சி காரணமாயமைந்தது. 2001 இல் பொருளாதார வளர்ச்சி எதிர்க் கணியமாயமைவதற்குப் பல விடயங்கள் காரணமாயமைந்தன. இவற்றில் பெரும்பாலான வற்றைப் பொருளாதார அதிர்ச்சி களெனக் (Economic Shocks) குறிப்பிடலாம் (2 வது வரைபடம்).

**முதலாவதாக,** உலக பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான கேள்வி வீழ்ச்சியுற்றதனைக்காட்டலாம். 2001 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தின் வெளியீடுகளின் வளர்ச்சி, எதிர்வு கூறப்பட்ட 4.2% வீத மட்டத்திலிருந்து 2.4% வீதம் வரை வீழ்ச்சியுற்றதனாலும், உலக வர்த்தகத் தொழிற்பாட்டின் அளவு 2000 ஆம் ஆண்டின் 10% வீதத்தை விடக் குறைந்ததனாலும் 2001 இல் இலங்கைப் பொருளாதாரம் சுருங்கியது. மதிப்பிடப்பட்ட வெளியீடுகளில் 64% வீதம் குறைவடைவதற்கு, உலகப் பொருளாதாரத்தின் இப் பின்னடைவு இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும், பல நாடுகளிலும் எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சி வேகம் அறிக்கையிடப் பட்டன.


1வது வரைபடம்

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (1995-2001)**




2வது வரைபடம்

**மொத்த வெளியீடுகளினது இழப்பு - 2001**




**இரண்டாவதாக,** வரட்சி தொடர்ந்து நிலவியதனாலும் அதன் காரணமாக நீண்டகால ரீதியில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டியேற்பட்டதனாலும் கமத்தொழில் வெளியீடுகள் 3% வீதத்தாலும் கைத்தொழில் வெளியீடுகள் 4% வீதத்தாலும் வீழ்ச்சியுற்றதைத் காட்டலாம். வரட்சியின் தாக்கம் காரணமாக மொத்த உள்நாட்டு வெளியீடு ஏறத்தாழ 13% வீதத்தால் குறைவடைந்தது.

**மூன்றாவதாக,** கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது விடுக்கப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக வெளியீடு 2% வீதமளவில் குறைவடைந்தது. நான்காவதாக, இவ் அனைத்து நடவடிக்கைகளினதும் இரட்டைத் தாக்கம் காரணமாக மொத்த உள்நாட்டு வெளியீடு 21% வீதத்தால் வீழ்ச்சியுற்றது.

## பொருளாதார வளர்ச்சி வேகம் எதிர்க்கணியமாதலின் பொருளாதாரப் பாதிப்புக்கள்

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் -1.4% வீதமானதால் திரள் கேள்வியில் (Aggregate Demand) வீழ்ச்சியொன்றைப் பதிவு செய்தது. அதாவது, தனிநபர் நுகர்வுச் செலவின் உண்மை வளர்ச்சி ஏறத்தாழ 0.4% வீதமாயிருந்ததோடு, முதலீட்டுச் செலவுகள் உண்மையிலேயே 17% வீதத்தால் குறைந்தது. இவ்வாறு மொத்த உள்நாட்டுச் சேமிப்பு வீதமும் முதலீட்டு வீதமும் மிகவும் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியுற்றது. (3வது புள்ளிவிபர அட்டவணை) 1990 ஆம் ஆண்டின் 14% வீதமாயிருந்த மொத்த உள்நாட்டுச் சேமிப்பு வீதம் 1999 ஆம் ஆண்டாகும்போது 19.5% வீதம்

3வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையின் மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களினதும் முதலீட்டினதும் சதவீதம்**

| ஆண்டு | உள்நாட்டு சேமிப்பு வீதம் | உள்நாட்டு முதலீட்டு வீதம் |
|---|---|---|
| 1990 | 14.3 | 22.2 |
| 1997 | 17.3 | 24.4 |
| 1998 | 19.1 | 25.1 |
| 1999 | 19.5 | 27.3 |
| 2000 | 17.4 | 28.0 |
| 2001 | 15.3 | 22.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அதிகரித்த போதிலும் இது 2001 இல் 15% வீதமான குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த முதலீட்டு வீதமும் 1990 ஆம் ஆண்டில் 22% வீத மட்டத்தி லிருந்து 2000 ஆம் ஆண்டாகும்போது 28% வீதம் வரை அதிகரித்த போதிலும் 2001 இல் 22% வீத மட்டத்திற்கு மீண்டும் வீழ்ச்சியடைந்தது.

அரச வரவு-செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை (அரச வருமானத்தைவிட அதிகரித்த நடைமுறைச் செலவுகள்) அல்லது அரச சேமிப்பின்மை (Government dis-Savings) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாக -4.9% வீதமாயிருந்ததே உள்நாட்டுச் சேமிப்புக்கள் வீழ்ச்சியுறுவதற்கான பிரதானமான காரணமாகும்.


## தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி

பொருளாதார வளர்ச்சி எதிர்க்கணிய மானதன் காரணமாக, தேசிய உற்பத்தியை நாட்டின் சனத்தொகைக்கு ஒப்பிட்டுக் கணிப்பிடப்படுகின்ற தலைக்குரிய வருமானத்திலும் (Per Capita Income) குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 2001 ஆம் ஆண்டின் நடைமுறைச் சந்தை விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி ரூபா 1,377 மில்லியனாக இருந்ததோடு, சனத்தொகை 2001 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீட்டின்படி 18.7 மில்லியனாதலால், நடைமுறைச் சந்தை விலையின்படி தலா வருமானம் ரூபா 73528 ஆக இருந்தது. இது 823 அமெரிக்க டொலர்களாகும். இது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 881 அமெரிக்க டொலர்களோடு ஒப்பிடுகின்றபோது குறைவடைதலாகும். அண்மிய வருடங்களில் இலங்கையின் தலா வருமானம் குறைவடைந்த இரண்டாவது வருடமாக 2001 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்கதாயுள்ளது (3வது வரைபடம்).

பொருளாதார வளர்ச்சி எதிர்க்கணிய மாதலின் மற்றைய பொருளாதாரப்பாதிப்பு தொழில் வாய்ப்புக்கள் உருவாதல் குறைவடைந்தமையாகும். அதாவது, அதிகரிக் காதிருந்ததாகும் இதன்படி தொழிலின்மை 2000 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த 7.5% வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது 2001 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டாகின்றபோது சிறிதளவில் அ, .வது 7.8% வீதம் வரை அதிகரித்தது.

3 வது வரைபடம்

**மொ.உ.உ.வளர்ச்சியின் சதவீதமும் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியும் (1992 - 2001)**




4வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையின் தலா வருமானம்**
(அமெரிக்க டொலர்)

| ஆண்டு | தலா வருமானம் (அ.டொ.) |
|---|---|
| 1990 | 469 |
| 1997 | 843 |
| 1998 | 865 |
| 1999 | 851 |
| 2000 | 881 |
| 2001 | 823 |

## இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு

இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்திக் கட்டமைப்பை முக்கியமான மூன்று பகுதிகளாகப் பிரித்துக்காட்டலாம்.

1. கமத்தொழில் துறை
2. கைத்தொழில் துறை
3. சேவைத் துறை

2001 ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை உற்பத்திக் கட்டமைப்புக்கு உரியதான மொத்த உள்நாட்டு உற்பத்தித் துறைகளைப் பிரித்துக் காட்டுகின்றபோது, சர்வதேச ஏற்றுக்கொள்ளப்பட்ட கைத்தொழில் வகைப்படுத்தலின் மூன்றாம் திருத்தத்திற்கு நேரொத்ததாக உலக வங்கியின் வெளியீடொன்றான World Economic Indicators க்காகத் தயாரிக்கப்பட்ட வகைப்படுத்துதலைப் பயன்படுத்தியுள்ளது. இவ் வகைப்படுத்தலுக்கு ஏற்ப கமத்தொழில் துறைக்கு கமத்தொழில், காடாக்கம் மற்றும் கடற்றொழில் துறைகளும், கைத்தொழில்துறைக்குச் சுரங்கம் மற்றும் அகழ்தல், வெளியிடுகைக் கைத்தொழில், மின்சாரம், வாயு, நீர், துப்புரவு ஏற்பாட்டுச் சேவை, கட்டிட நிர்மாணிப்பு ஆகிய துறைகளும் சேவைத் துறைக்கு ஏனைய அனைத்து உப துறைகளும் உரித்தாகின்றன. இதன்படி 2001 ஆம் ஆண்டின் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு வெளியீட்டு முறைக்கு ஏற்ப 5 ஆம் புள்ளிவிபர அட்டவணையின்கீழ் சுருக்கமாகக் காட்டப் பட்டுள்ளது. 6வது புள்ளிவிபர அட்டவணையின் கீழ் 1998 - 2000 ஆம் ஆண்டு காலப் பகுதிக்காக இது விரிவாக வகைப்படுத்திக் காட்டப் பட்டுள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்திக் கட்டமைப்பு தீவிர மாற்றத்துக்குள்ளாகி வருகின்றது. அதாவது, 1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கின்றபோது கமத்தொழில் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 35% வீதமாக இருந்தது. இது இன்று 19% வீதம் வரை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. மறுபுறம் 1948 ஆம் ஆண்டு காலத்தில் 21% வீதமாக இருந்த கைத்தொழில் துறையும் இன்று 27% வீதமாகவும், சேவைத்துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 44% வீதம் வரையிலும் வளர்ச்சியடைந்துள்ளன. இது ஒரு நாட்டின் வருமான மட்ட அதிகரிப்பைத் தொடர்ந்து நடைபெறுகின்ற கேள்வி முறையின் மாற்றத்துக்கு ஏற்ப நடைபெறுவதாகும். அதாவது, மக்களுடைய வருமானம் பரந்தளவில் அதிகரிப்பதைத் தொடர்ந்து உணவுக்கான வருமானக் கேள்வி நெகிழ்வு 1க்குக் குறைந்த பெறுமதியைப் பெறுவதோடு கைத்தொழில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வருமானக் கேள்வி நெகிழ்வு 1க்குக் கூடுதலான பெறுமதியைப் பெறும். இது ஒரு நாடு அபிவிருத்தியடைகின்றதென்பதற்கான இலட்சணமாகுமென்பது அபிவிருத்திப் பொருளியலாளர்களது கருத்தாகும். கடந்த தசாப்தத்தினுள் (1991-2001) பொருளாதாரக் கட்டமைப்பின் மாற்றத்தை 4வது வரைபடம் காட்டுகின்றது.


5வது புள்ளிவிபர அட்டவணை


**இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு 2001**

| சேர்க்கப்பட்ட பெறுமதி | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாக |
|---|---|
| கமத்தொழில் துறை | 19.4 |
| கைத்தொழில் துறை | 26.5 |
| சேவைகள் | 54.1 |
| மொத்தம் | 100.0 |

4வது வரைபடம்

**மொ.உ.உ.யின் துறைவாரியான உள்ளமைப்பு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 வது புள்ளிவிபர அட்டவணை

**நடைமுறைக் காரணி விலைக்கு ஏற்ப மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம் (நூற்றுவீதமாக)**

| துறை | 1998 | 1999 | 2000 | 2001(அ) |
|---|---|---|---|---|
| 1. கமத்தொழில், காடாக்கல், கடற்றொழில் (கமத்தொழில் துறை) | 21.1 | 20.7 | 19.4 | 19.4 |
| 2. கைத்தொழில் | 27.5 | 27.3 | 27.3 | 26.5 |
| 2.1 சுரங்கம் மற்றும் அகழ்தல் தொழிற்பாடுகள் | 1.9 | 1.8 | 1.9 | 1.9 |
| 2.2 வெளியீட்டுக் கைத்தொழில்கள் | 16.5 | 16.4 | 16.8 | 15.8 |
| 2.3 மின்சாரம், வாயு, நீர் வழங்கல் | 1.5 | 1.5 | 1.2 | 1.3 |
| 3. சேவைகள் | 51.4 | 52.0 | 53.3 | 54.1 |
| 3.1 போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல் மற்றும் தொடர்பாடல் | 11.1 | 11.1 | 11.7 | 12.3 |
| 3.2 மொத்த, சில்லறை வர்த்தகம் | 21.5 | 21.2 | 22.6 | 21.9 |
| 3.3 வங்கிகள், காப்புறுதி மற்றும் அசையாச் சொத்துக்கள் | 7.6 | 8.1 | 8.1 | 8.4 |
| 3.4 வீட்டுரிமை | 1.9 | 1.8 | 1.8 | 1.9 |
| 3.5 பொது நிருவாகமும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் | 5.3 | 5.3 | 5.2 | 5.5 |
| 3.6 சேவைகள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.0 | 4.1 | 4.0 | 4.1 |
| 4. மொத்த உள்நாட்டு உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 5. வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம் | -1.3 | -1.8 | -2.1 | -2.0 |
| 6. மொத்த தேசிய உற்பத்தி | 98.7 | 99.2 | 97.6 | 98.0 |

இங்கு நினைவில் இருத்திக்கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், இலங்கையின் கமத்தொழில் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் குறைவாய் இருந்தபோதிலும், பெரும்பாலான துறைகளில் இதன் தனிமுதல் முக்கியத்துவம் உயர்மட்டத்தை அடைந்திருந்த தென்பதே. உதாரணமாக, சுதந்திரமடைகின்றபோது இலங்கையின் தேயிலை உற்பத்தி 136 மில்லியன் கிலோவாக இருந்ததோடு, 2001 ஆம் ஆண்டில் 295 மில்லியன் கிலோவாக இருந்தது. இக்காலத்தினுள் தேங்காய் உற்பத்தி 1,766 மில்லியன் தேங்காய்களிலிருந்து 2,796 மில்லியன் தேங்காய்களாக அதிகரித்தது. நெல் உற்பத்தி 1,350 மெட்றிக் தொன்களிலிருந்து 2,695 மெட்றிக் தொன்களாக அதிகரித்தது. இறப்பர் உற்பத்தி மாத்திரம் 96 மில்லியன் கிலோவிலிருந்து 86 மில்லியன் கிலோவாகக் குறைந்தது. எவ்வாறாயினும், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் துரித அபிவிருத்தியின் காரணமாக கமத்தொழில் உற்பத்திகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் சுதந்திரத்தின் பின்னர் படிப்படியாகக் குறைந்தது 2001 ஆம் ஆண்டாகும்போது, தேயிலை 1.4% வீதமாகவும், இறப்பர் 0.4% வீதமாகவும், தேங்காய் 1.6% வீதமாகவும் பெருந்தோட்டப் பயிர்களின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 3.4% வீதமாகவும் இருந்ததோடு, நெல் உற்பத்தி 1.6% வீதமாகவும் இடைக்காலப் பயிர்களும் ஏனைய பயிர்ச் செய்கைகளும் 3.1% வீதமாகவும் கடற்றொழில் 2.7%, மரத்தொழில் 1.9% வீதமாகவும் மிகக் குறைந்த முக்கியத்துவத்தினைப் பதிவுசெய்தது. மறுபுறம், கைத்தொழில் துறையின் வெளியீட்டுக் கைத்தொழில்களின் ஒப்பீட்டு முக்கியத்துவம் படிப்படியாக அதிகரித்து 2001 ஆம் ஆண்டில் 16.9% வீதமாகப் பதிவு செய்யப்பட்டது. கட்டிட நிர்மாணத் துறை 7.3% வீதமாகவும், சுரங்கம் மற்றும் அகழ்தல் துறை 1.8% வீதமாகவும் மின்சாரம், வாயு, நீர் மற்றும் துப்புரவு ஏற்பாட்டுச் சேவை ஆகியன 1.4% வீதமாகவும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தினை 2001 ஆம் ஆண்டாகும் போது பதிவு செய்தது.

இலங்கைப் பொருளாதாரத்தின் மிகப் பெரிய துறையாக சேவைத்துறை வளர்ச்சியடைந்து 54% வீத அதிகூடிய முக்கியத்துவத்தினை 2001 ஆம் ஆண்டில் பதிவு செய்ததோடு, இதில் மொத்த, சில்லறை வர்த்தகம் மிகப் பெரிய சேவையாக மாறி 24% வீதத்தினைப் பதிவு செய்தது. இரண்டாவது முக்கிய சேவைத் துறையாக போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் (12.5%) விளங்குவதோடு, மூன்றாவது முக்கிய சேவைத் துறையாக வங்கிகள், காப்புறுதி, அசையாச் சொத்துக்கள் (8.1%) முக்கியத்துவம் வகிக்கின்றன. ஏனைய சேவைகள், அதாவது பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு 5% வீதமாகவும், வீட்டுரிமை 1.8% வீதமாகவும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

## இலங்கைப் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியும் மொத்த வளங்களும்

உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளின் மூலம் பிறக்கின்ற மொத்தக் கேள்வி என்பது அரச மற்றும் தனியார் துறை ஆகிய இரு துறைகளிலும் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவுகளின் கூட்டுத்தொகையின் மூலம் காட்டப்படுகின்ற மொத்த உள்நாட்டுச் செலவுகளாகும். 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்தக்கேள்வியின் உள்ளடக்கம் 7வது புள்ளிவிபர அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தனியார் நுகர்வுச் செலவு மொத்த நுகர்வுச் செலவில் 88% வீதமாவதோடு, பொது (அரச) நுகர்வுச் செலவு அல்லது அரசாங்கத்தின் பொருட்களுக்கும் சேவைகளுக்குமான நடைமுறைச் செலவு 12% வீதமாயிருந்தது. மொத்த முதலீட்டு செலவு ரூபா 308 பில்லியன்களுக்குப் பங்களிப்புச் செய்த முக்கியமான துறைகளை, முறையே கட்டிட ஆக்கமும் நிர்மாணிப்பும், இயந்திரச் சாலைகளும் இயந்திர உபகரணங்களும், போக்குவரத்து உபகரணங்கள், பயிர்ச்செய்கை மீள் பயிரிடல் மற்றும் காணி அபிவிருத்தி அத்துடன் ஏனைய மூலதனப் பொருட்கள் எனக் குறிப்பிடலாம். இலங்கையில் 2001 ஆம் ஆண்டின் மூதலீட்டு வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 22% வீதமாக இருந்ததோடு, தனியார் முதலீடுகள் குறைந்தமை இதற்குப் பெருமளவு காரணமாயமைந்தது. தனியார் துறை முதலீடுகள் வீழ்ச்சியுறுவதற்குப் பல காரணங்கள் ஏதுவாயிருந்தன.

- பொருளாதாரச் செயற்பாடுகளின் மந்தகதியிலான வளர்ச்சி
- தொழில் முயற்சிகளில் நம்பிக்கை குறைந்தமை
- அழுத்தத்திற்கு உள்ளான பங்குச் சந்தையின் காரணமாக புதிய முதலீட்டாளர்கள் வருகை தராமை
- அதிகூடிய வட்டிவீதம் செயற்படுத்தப் பட்டமை.
- நாட்டிற்கு வெளியிலிருந்து வருகின்ற முதலீடுகள் குறைந்தமை
- நாட்டில் நிலவிய அரசியல் நிலைப் பாடின்மை

கணிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 8% வீதப் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கெனில் நடுத்தர கால அளவிலான முதலீட்டு வீதம் 30% வீதமாயிருத்தல் வேண்டும். இதற்கு தனியார்துறை முதலீடு 25% வீதத்துக்கு அதிகமானதொரு அளவில் அதிகரித்தல் வேண்டும்.

உள்நாட்டு வளங்களாகக் கருதப்படுகின்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியும், வெளிநாட்டு வளங்களாகக் கருதப்படுகின்ற இறக்குமதிப் பொருட்களும் காரணிகளற்ற சேவைகளுமே பொருளாதாரத்தின் மொத்த வளங்களுக்கு உரித்தாகின்றன. 2001 ஆம் ஆண்டில் மொத்த வளங்கள் ரூபா 2,011 பில்லியன்களாக இருந்தன. இதில் 60% வீதம் நுகர்வுக்காகவும் 15% வீதம் முதலீட்டுக்காகவும் ஒதுக்கப்படுவதோடு, எஞ்சிய

7வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கைப் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி**

| தலைப்பு | பெறுமதி (ரூபா பில்லியன்) |
|---|---|
| 1. தனியார் நுகர்வு | 1,044 |
| 2. அரச நுகர்வு | 142 |
| 3. மொத்த நுகர்வு (1+2) | 1,186 |
| 4. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | 308 |
| 5. கையிருப்பு வேறுபாடுகள் | - |
| 6. மொத்த முதலீடு (4+5) | 308 |
| 7. மொத்த உள்நாட்டு செலவு (3+6) | 1,494 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


25% வீதம் ஏற்றுமதிப் பொருட்களுக்காகவும் காரணிகளற்ற சேவைகளுக்காகவம் ஒதுக்கப் படுகின்றன.

## அரச பொருளாதாரம்

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த அரச துறைச் செயற்பாடுகள் அல்லது திரட்டிய நிதியியல் செயற்பாடுகள் (Consolidate Fiscal Operations) மிகப் பெரும் பின்னடைவுக்கு உள்ளாகின. அரச நிதியியற் செயற்பாடுகளை ஒன்றுதிரட்டிய நிலைமைக் குட்படுத்துவதற்கு அரச நிதியியற் கொள்கையே முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. அரச நிதியியற் கொள்கை அல்லது பிஸ்கல் கொள்கை (Fiscal Policy) என்பது அரச பொருளாதார நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்ளும் பொருட்டு வரிகள், அரச செலவுகள் மற்றும் வரவு செலவுப் பற்றாக்குறை/ மேன்மிகை என்பவற்றைப் பிரயோகிப்பதாகும். அரச நிதியியற் கொள்கையை வழிப்படுத்துவதற்கு 2001 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அவசியமான ஒரு சில வழிவகைகள் பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு சில காரணங்களினால் வரவு செலவுத்திட்ட இலக்கை அடைய முடியாமற் போயிற்று. 2001 ஆம் ஆண்டில் அரச நிதியியற் துறையின் வீழ்ச்சியானது, நடைமுறைக் கணக்கின் நிலுவை உள்நாட்டு உற்பத்தியில் (மொ.உ.உ.) 4.9% வீதமாக அதிகரித்தமை, அரச சேமிப்புக்கள் கடும் எதிர்க்கணிய நிலைமைக்குள்ளாகியமை, மொத்த வரவு செலவுப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.9% வீதம் வரை அதிகரித்தமை ஆகியவை முலம் பிரதிபலிக்கக் கூடியதாயிருந்தது. (5வது வரைபடத்தைப் பார்க்கவும்.) இவ் வீழ்ச்சிக்குப் பிரதானமாக மூன்று விடயங்கள் காரணமாயமைந்தன.

5வது வரைபடம்

**வரவு செலவுப் பற்றாக்குறை**
**(மொ.உ.உ.யின் நூற்றுவீதமாக)**




**முதலாவதாக,** உலக பொருளாதாரத்தின் மந்தகதியிலான நிலைமை காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கியமையையும், இதை மேலும் பாதிக்கக்கூடிய வகையிலான கடும் வரட்சியையும், மிக மோசமான நிலைக்குள்ளா கியிருந்த வடகிழக்கு யுத்தத்தையும் குறிப்பிடலாம். இறக்குமதித் தொழிற்பாடுகளின் பின்னடைவினாலும் தனியார்மயப்படுத்தல் இலக்கை நிறைவேற்றிக் கொள்ள முடியாமற்போனமையினாலும் அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட வரவுகள் ரூபா 50 பில்லியன்களால் குறைந்தமையைச் சுட்டிக் காட்டலாம். **இரண்டாவதாக,** பொருளா தாரத்தின் நலிவடைந்த செயற்பாடு, அதி உயர் வாழ்க்கைச் செலவு, உறுதியற்ற அரசியல் நிலைமை ஆகியன காரணமாக முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு நிதிச் சலுகைகளைப் பெற்றுக் கொடுப் பதற்கும், பொருளாதார ரீதியில் பலவீனமான பிரிவினருக்கு புதிய மானியங்களை வழங்கு வதற்கும் அரசாங்கத்திற்கு நேரிட்டமையைச் சுட்டிக்காட்டலாம். **மூன்றாவதாக,** 2001 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருசில அரச நிதியியற் பொருத்தங்கள் செயற்படுத்தப்படாமையைச் சுட்டிக்காட்டலாம். அதேபோன்று தேர்தல் மற்றும் வரட்சிக்காக மேலதிக செலவுகளை ஏற்கவேண்டி வந்தமையையும் குறிப்பிடலாம்.

## நடைமுறைக் கணக்கு

அரச நிதியியற் செயற்பாடுகளைப் பற்றி நடத்தப்படுகின்ற ஆய்வின்போது அரச வரவு செலவுத்திட்ட நடைமுறைக் கணக்கே முதலில் முக்கியத்துவம் வகிக்கின்றது. நடைமுறைக் கணக்கில் அரச வருமானமும் (வரிகள் மற்றும் வரிகளல்லாத) நடைமுறைச் செலவுகளுமே உள்ளடங்கியுள்ளன. அரச வருமானத்தை மீறிய விதத்தில் நடைமுறைச் செலவுகள் இருப்பின் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையெனக் குறிப்பிடலாம். நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையானது அரச சேமிப்பின்மை (Government dis-savings) நிலையைப் பிரதிபலிக் கின்றது. நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையில் பல பொருளாதாரப் பாதிப்புக்கள் உள்ளன. பொது நுகர்வுக்குக்கூட அரசாங்கம் கடன் பெறவேண்டி யேற்படுதல், மூலதன செலவுகளுக்கு (முதலீடு களுக்கு) வளங்களை உருவாக்க முடியாதிருத்தல், அரச வருமானத்தின் மூலம் நடைமுறைச் செலவுகளை அடைக்க முடியாமையினால் அரச படுகடன் நிலை அதிகரித்தல், வரவு செலவுத் திட்டத்தின் மீது அழுத்தம் அதிகரித்து வரவு செலவுப் பற்றாக்குறை அதிகரித்தல், பற்றாக்குறையை அடைப்பதற்கு பணவீக்கம் ஏற்படக்கூடிய வழிகளின் மூலம் கடன் பெறவேண்டியேற்படுமாயின் நாட்டின் பணவீக்க வேகம் அதிகரித்தல், அரச நிதியியற் தொழிற்பாடுகள் பாதகமாயுள்ளதென்பதைக் காட்டக் கூடியதொரு சுட்டெண்ணாயிருத்தல், நாட்டின் மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் குறைவதற்குக் காரணமாயிருத்தல் போன்றன இப் பாதிப்புக்களாகும். இலங்கையின் அண்மிய ஆண்டுகளின் வரவுசெலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 2% - 5% வீதத்துக்கு இடையிலான மட்டத்தில் இருந்தது (8வது புள்ளிவிபர அட்டவணை).

8வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையின் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை**
**1997 - 2001**

| ஆண்டு | பற்றாக்குறை மொ.உ.உ.% |
|---|---|
| 1997 | -2.2 |
| 1998 | -2.4 |
| 1999 | -1.0 |
| 2000 | -3.4 |
| 2001 | -4.9 |

நடைமுறைக் கணக்கில் அடங்கியுள்ள அரச வருமானத்தினதும் நடைமுறைச் செலவுகளினதும் போக்குகளை வெவ்வேறாக ஆராய்வோம்.

## அரசிறை

2001 ஆம் ஆண்டின் இலங்கையின் அரசிறை ரூபா 232 பில்லியனாய் இருந்ததோடு, இது மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் 16.5% வீதமாக இருந்தது. இது 2000 ஆம் ஆண்டின் 16.8% வீதத்தோடும் 1999 ஆம் ஆண்டின் 17.7% வீதத்தோடும் ஒப்பிடப்படுகின்றபோது குறிப்பிடத்தக்கதொரு பின்னடைவாகும். பொருளாதார தொழிற்பாடுகள் சுருங்கியமை அரசிறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் குறைவடைவதற்குக் காரணமாயமைந்தது. அரசிறை, வரிகள் மற்றும் வரிகளல்லாத விதமாக இரண்டு வகைப்படுகின்றன. வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.6% வீதமாயிருந்ததோடு, வரிகளல்லாத வருமானம் 1.9% வீதமாயிருந்தது. 1997 - 2001 ஆம் ஆண்டின் காலத்தினுள் இலங்கையின் அரசிறையின் உள்ளமைப்பு மாற்றமுற்ற விதத்தினை 6வது வரைபடமும் 2001 ஆம் ஆண்டின் அரசிறையின் உள்ளமைப்பை 9வது புள்ளிவிபர அட்டவணையும் சுட்டிக் காட்டுகின்றன.

இலங்கையின் அரசிறையின் உள்ளமைப்பில் ஒரு சில விசேட பண்புகளைக் காணக்கூடிய தாயுள்ளது.

1. அரசிரையில் ஏறத்தாழ 86% வீதமானவை வரி வருமானமாயிரும்மில் மற்றும் 14% வீதம் வரியல்லாத வருமானமாயிருத்தல் (அதா வது, மத்திய வங்கியின் இலாபங்களை மாற்றுதல், வட்டி வருமானம், கட்டணங்களும் அறவீடுகளும் போன்றவை).
2. அரசிறையில் ஏறத்தாழ 3/4 பங்கு மறைமுக வரியாயிருத்தல் (மறைமுக வரியென்பது பண்டங்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப் படுகின்ற, இடம் பெயர்க்கக்கூடிய உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் சேகரித்து அரசாங்கத்துக்குச் செலுத்துகின்ற வரி வருமானமாகும்).

   கவனிக்க: 2002 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் பிரதானமான மறைமுக வரியான பண்டங்கள் சேவைகள் வரியையும் பாதுகாப்பு வரியையும் இரத்துச் செய்வதற்கான பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன.
3. அதிகூடுதலான வரி வருமானம் பண்டங்கள், சேவைகள் வரிகளின் (GST) மூலம் கிடைக்கப்பெறுதல். (இது மொத்த அரச வருமானத்தில் 21% வீதமாய் இருப்பதோடு, தேசிய வருமானத்தில் 3.3% வீதமாக உள்ளது. 2002 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து இந்த பண்டங்கள் சேவைகள் வரி (GST) மற்றும் தேசிய பாதுகாப்பு வரி இரத்துச் செய்யப்பட்டு சேர் பெறுமதி வரி (Value Added Tax - VAT) அறிமுகப்படுத்தப்பட்டது. வரி வருமானத்தைப் பொறுத்த வரை, இரண்டாவது இடத்துக்கு உற்பத்தி வரியையும் (20%) மூன்றாவது இடத்துக்கு வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரியையும் (இறக்குமதி) (11%) குறிப்பிடக்கூடியதாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9வது புள்ளிவிபர அட்டவணை


**இலங்கையின் அரசிறை உள்ளமைப்பு - 2001**

| விடயம் | மொத்த வருமானத்தின் சதவீதமாக | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக |
|---|---|---|
| (1) வரி வருமானம் | 86 | 15 |
| 1.1 வருமான வரிகள் | 13 | (2.5) |
| 1.2 முத்திரை வரிகள் | 4 | (0.6) |
| 1.3 பண்டங்கள் சேவைகள் வரிகள் (GST) | 21 | (3.3) |
| 1.4 உற்பத்தி வரிகள் | 20 | (3.2) |
| 1.5 தேசிய பாதுகாப்பு அறவீடு | 15 | (3.1) |
| 1.6 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்/ மோட்டார் வாகன வரி | 1 | (0.1) |
| 1.7 இறக்குமதி வரிகள் (சர்வதேச வர்த்தகத்தின் மீதானவரிகள்) | 11 | 1.9 |
| (2) வரியல்லாத வருமானம் | 14 | 1.9 |
| (3) மொத்த வருமானம் (1+2) | 100 | 16.5 |


6வது வரைபடம்

**வருமான உள்ளமைப்பு**

1997




2001




4.வருமான வரிகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் அரசிறையில் 13% வீதமாயிருந்தது. வருமானவரி ஒரு நேரடி வரியாகும். நேரடி வரியென்பது வருமானம், பணம் மற்றும் சொத்துக்களின் மீது விதிக்கப்படுகின்ற இடம்பெயர்க்க முடியாத குறிப்பிட்ட நபரினாலேயே செலுத்தப்பட வேண்டியதொரு வரி வகையாகும்.

## நடைமுறைச் செலவினம்

வரவு செலவுத் திட்ட நடைமுறைக் கணக்கில் அடுத்து முக்கியத்துவம் வாய்ந்ததாயிருப்பது நடைமுறைச் செலவினமாகும். (Current Expenditure) நடைமுறைச் செலவினமென்பது அரச சேவைகளைப் பேணி வருவதற்காகச் செய்யப்படுகின்ற அனைத்துச் செலவுகளுமாகும். இந்த நடைமுறைச் செலவுகளுக்கு உரியனவாக, பண்டங்களையும் சேவை களையும் கொள்வனவு செய்வதற்காகச் செய்யப்படுகின்ற செலவுகள் (மத்திய அரசாங்கத்தின் சிவில் துறை + பாதுகாப்புத் துறை), வட்டி செலுத்துகைகள், ஓய்வூதியம் உட்பட ஏனைய நடைமுறை இடம்பெயர்வுகள் உள்ளன. நடைமுறை இடம் பெயர்வுகள் என்பவை, அரச சேவையைப் பேணி வருவதற்காகச் செய்யப்படுகின்ற செலவுகளில் அடங்கியுள்ள ஒருதலைப்பட்டசச் செலவுகளாகும். இதன்படி நடைமுறைச் செலவுகளில் கைமாற்றல் தன்மையில் நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் போன்றே ஒருதலைப்பட்சக் கொடுக்கல் வாங்கல்களும் அடங்குகின்றனவென்பதைக் காணலாம். இந்த நடைமுறைச் செலவுகளில், தேசிய கணக்கீட்டுச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை, அரச நுகர்வுச் செலவுகளின் கீழ் பதியப்படுகின்றபோது நடைமுறைச் செலவுகளில் பண்டங்களும் சேவைகளுக்குமான செலவுகள் மாத்திரமே கவனத்திலெடுக்கப்படுகின்றன. அதாவது, உற்பத்தியொன்று உருவாவதற்குக் காரணமாயமைகின்ற செலவு வகைகள் மாத்திரமேயாகும். வருமான மீள் பரவலாக்கலை உருவாக்கின்ற இடம்பெயர் செலவுகள் நீக்கப் படுகின்றன.

மொத்த அரச செலவினங்களில் 80% வீதமும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 21.5% வீதமுமான இலங்கையின் நடைமுறைச் செலவுகளின் உள்ளமைப்பு 10வது புள்ளிவிபர அட்டவணையின் கீழும் 7வது வரைபடத்தின் கீழும் காட்டப்பட்டுள்ளது.

10வது புள்ளிவிபர அட்டவணையின்படி இலங்கையின் அரச வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைச் செலவுகளில் ஒரு சில விசேட பண்புகளை அடையாளங்காணக் கூடிதாயுள்ளது. **முதலாவதாக,** நடைமுறைச் செலவுகளில் 31% வீதம்

10வது புள்ளிவிபர அட்டவணை


**இலங்கையின் நடைமுறைச் செலவுகளின் உள்ளமைப்பு - 2001**

| துறை | நடைமுறைச் செலவில் % |
|---|---|
| 1. மத்திய அரசாங்கத்தின் சிவில்துறை | 15 |
| 2. பாதுகாப்புச் செலவுகள் | 23 |
| 3. கடன் வட்டி | 31 |
| 4. துணை அரச நிறுவனங்களில் செய்யப்பட்ட இடம்பெயர்வுகளும் ஏனைய இடம்பெயர்வுகளும் | 13 |
| 5. குடும்ப இடம்பெயர்வுகள் | 18 |
| 5.1 ஓய்வூதியம் | (9%) |
| 5.2 சமுர்த்திக் கொடுப்பனவுகள் | (4%) |
| 5.3 உர மானியம் | (1%) |
| 5.4 ஏனைய குடும்ப ஒப்படைகள் | (4%) |
| **மொத்தம்** | **100** |


7வது வரைபடம்

**நடைமுறைச் செலவுகளின் உள்ளமைப்பு**

1997




2001






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசபடுகடன் வட்டிகளாகச் செலுத்துவதற்காகவே செலவிடப்படுகின்றது. 1999 - 2001 வரையிலான காலப்பகுதியினுள் இது 28% - 31% வீதம் வரை இருந்தது. இது அரசாங்கம் வரவு செலவுப் பற்றாக்குறையை அடைப்பதற்குப் பெரும் தொகையில் கடன் பெறுவதன் பெறுபேறாகும். இதனால் வருடாந்தம் அரச கடன் பணிகளைச் (கடன் தவணைப் பணம் + வட்டி) செலுத்து வதற்கு அரசாங்கத்துக்குப் பெருந்தொகையான வளத்தை ஒதுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

**இரண்டாவதாக,** நடைமுறைச் செலவுகளில் 23% வீதம் பாதுகாப்புச் செலவுகளுக்காகச் செலவிடப்படுகின்றது. 2001 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு ரூபா 68 பில்லியனாக இருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 5% வீதமாகும் வளங்கள் குறைந்த இலங்கை போன்றதொரு நாடு யுத்தத்துக்காகச் செலவு செய்கின்ற தொகை பெருமளவில் அதிகரிப்பதில் அமையச் செலவு அதிகமாயிருக்கும் அதாவது, கல்வி, சுகாதாரம் போன்ற நலனோம்புகைத் துறைகளில் ஈடுபடுத்துவதற்கு உள்ள வளங்கள் இதன் மூலம் குறைவடை வதனாலாகும். அதேபோன்று பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவடைதல், தொழில் வாய்ப்புக்கள் குறைவடைதல் பணவீக்கத் தாக்கங்கள் அதிகரித்தல், சென்மதி நிலுவைப் பிரச்சினை தீவிரமடைதல், பொதுமக்களது வாழ்க்கை சிக்கலுக்குள்ளாதல், உயிரிழப்புக்கள் ஏற்படுதல், சொத்துச் சேதங்கள் ஏற்படுதல் என்பன யுத்தத்தின் ஏனைய பாதகமான பொருளாதாரச் சமூக விளைவுகளாயிருக்கும்.

**மூன்றாவதாக,** குடும்ப இடம் பெயர்வுகள் 28 வீதமும் அத்துடன் துணை அரச நிறுவனங்களுக்குச் செய்யப்பட்ட இடம்பெயர்வுகளும் ஏனைய இடம் பெயர்வுகளும் 13% வீதமும் சேர்ந்து மொத்த இடம்பெயர் செலவுகள் 31% வீதமாகும். இலங்கையின் இடம்பெயர்வுகளை (நடைமுறை ஒப்படைகள்) அதன் பெறுமதிக்கு ஏற்ப முறையே ஓய்வூதியம், சமுர்த்திக் கொடுப்பனவுகள், அரச தொழில் முயற்சிகளுக்குச் செய்யப்படுகின்ற இடம்பெயர்வுகள் மற்றும் உரமானியம் எனக் குறிப்பிடலாம். ஏனைய இடம்பெயர்வுகளின் கீழ் இலவச பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலைச் சீருடைகள், தவணைப் பயணச் சீட்டுக்கள், வலதுகுறைந்த படைவீரர் களுக்கான கொடுப்பனவுகள், அகதிகளுக்கான உலர் உணவு விநியோகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## அரச முதலீடு (PublicInvesetment) மற்றும் அரச தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு (Public Sector Reforms)

**அரச முதலீடு** என்பது மூதனச் செலவுகளையும் மீள் கொடுப்பனவுகளையும் கழித்த பின் கடன் வழங்கல் (தேறிய கடன் வழங்கல்) ஆகும். **மூலதனச் செலவு** என்பது உண்மைச் சொத்துக்களை அடைவதற்காகச் செய்யப்படுகின்ற செலவுகளினதும் மூலதன இடம்பெயர்வுகள் அல்லது மூலதன ஒப்படைகளினதும் கூட்டுத் தொகையாகும். **தேறிய கடன் வழங்கல்** எனப்படுவது, கடன் வழங்கலுக்கும் கடன் மீளப் பெறுதலுக்கும் இடையிலுள்ள வித்தியாசமாகும். இதன் கீழ் முற்பணக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களும் மீள் கட்டமைப்புச் செலவுகளும் அடங்குகின்றன. விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தல் அரச முதலீட்டுச் செலவுகளின் குறிக்கோளாகும். 2001 ஆம் ஆண்டு அரச முதலீடுகளின் பெறுமதி ரூபா 82 பில்லியனாயிருந்தது. இது மொத்தத் தேசிய உற்பத்தியின் 6% வீதமாகும். நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக, கடன் பெறுவதன் மூலமே அரச முதலீடுகளை நிதியிட வேண்டியேற்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் தனியார்மயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா. 25 பில்லியன் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், ரூபா8.6 பில்லியனே வருமானமாகக் கிடைத்தது. அரசியல் நோக்கு மாற்றமுற்றதன் காரணத்தினால் பொருளாதாரத்தைத் தளர்த்துதல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியின் காரணமாக உற்பத்திச் செயற்பாடுகள் மாற்றமுற்றதைத் தொடர்ந்து வினைத்திறனற்ற அரச நிறுவனங்கள் நீக்கப்பட்டமை மற்றும் அரச தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு ஆகியன 1980களின் இறுதிக் காலகட்டத்திலும் 1990களின் ஆரம்பக் காலகட்டத்திலும் பெரும்பாலான நாடுகளில் நடைபெற்றதைப் போன்று இலங்கையிலும் நடைபெற்றன. இதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு, அரசாங்கத்தினால் நிறுவனக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இதன் பெறுபேறாக தனியார்மயமாக்கலுக்கான சனாதிபதி ஆணைக்குழு, அரச முதலீட்டு முகாமைச் சபை, நிதி அமைச்சின் கீழான வர்த்தகப் பிரிவு, அரச தொழில் முயற்சிகளை தனியார்மயப்படுத்துதலுக்கான செயலணி போன்ற பல நிறுவனங்கள் 1980 - 1995 வரையிலான காலகட்ட்த்தினுள் நிறுவப்பட்டன. 1996 ஆம் ஆண்டில் தனியார்மயப் படுத்தலுக்கான செயலணிக்குப் பதிலாக இலங்கை பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (PERC) நிறுவப்பட்டது. 1989 - 2001 ஆம் காலகட்டத்தினுள் இலங்கையில் தனியார்மயமாக்கலுக்குள்ளான அரச தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 80 ஆகும். இதில் 23 கமத்தொழில் துறையிலும், 37 கைத்தொழில் துறையிலும் 5 நிதியியல் துறையிலும், 15 சேவைத்துறையிலும் தொழிற்பட்டுக் கொண்டிருந்த அரச தொழில் முயற்சிகளாயிருந்தன. மேலும், 70 அரச நிறுவனங்கள் பல்வேறு பொருளாதாரத் தொழிற்பாடுகளில் இற்றைவரை ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இந் நிறுவனங் களும் பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆதலால் இவை அரச வரவு செலவுத் திட்டத்திற்குப் பெரும் சுமையாய் உள்ளன. இதில் பெரும்பலானவை எதிர்காலத்தில் பல்வேறு சீர்திருத்தங்களுக்கும் உள்ளாகலாம்.

அரச தொழில் முயற்சிகளை மறுசீரமைக் கக்கூடிய முறைகள்.

- ஒழுங்குவிதிகளைத் தளர்த்துதல் அல்லது அரச நிறுவாகத்திலிருந்து நீக்குதல்.
- மானியங்களை நீக்குதல்.
- சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப விலைகளில் திருத்தங்களைச் செய்தல்
- அரச தொழில் முயற்சிகளை இலாப மீட்டக்கூடிய பல கூறுகளாகப் பிரித்தல்
- ஆக்கச் செலவுக்ளைக் குறைப்பதற்கு அரச துறையின் ஒரு சில பணிகளைத் தனியார் பிரிவுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்
- முகாமைத்துவத்தை மாத்திரம் தனியார் மயமாக்கல் அல்லது முகாமைத்து வத்தைக் குத்தகையளித்தல்
- செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையொன்றை அறிமுகப்படுத்தல்
- அரசியல் தலையீடுகளை நீக்குதல்
- தனியார்மயமாக்கல்
- அரச தொழில் முயற்சிகளின் பணிகளை நிறுத்தி அவற்றின் சொத்துக்களைத் தனியார் துறையிடம் ஒப்படைத்து அரச தொழில் முயற்சிகளின் கொடுக்கல் வாங்கல்களை ஒழித்தல்.

அரச தொழில் முயற்சிகளை மறுசீரமைப்பதில் அனுகூலங்களைப் போள்றே பிரதிகூலங்களும் உள்ளன. வினைத்திறனில் முன்னேற்றம், போட்டிநிலையை மேம்பாடடையச் செய்தல், நுகர்வோர் சேமநலன் அதிகரித்தல், அரச வரவு - செலவுத்திட்டத்தின் மீதான அலுத்தம் குறைதல், நவீனமயமாதல், வெளிநாட்டு மூலதனத்தையும் நிபுணத்துவ அறிவையும் பெற்றுக்கொள்ள முடியுமாதல், புத்தாக்கங்களில் நுழைய முடியுமாதல், முறைகேடான கையாளுகைகள் குறைவடைதல், அரசியல் தேவைகளுக்காக ஈடுபடுத்தப்படுதல் குறைவடைதல், செயலாற்றுகையின் மீது ஊழியர்களுக்கு மிகையூதியம் கிடைப்பதற்குக் காரணமாயமைதல், மற்றும் ஊழியர் உற்பத்தித் திறன் அதிகரித்தல் ஆகியவற்றை அரச தொழில் முயற்சிகள் மறுசீரமைக்கப்படுதலிலுள்ள அனுகூலங்களாகக் காட்டலாம்.

## பண நிரம்பல், வங்கித் தொழில் மற்றும் விலைமட்டம்

பண நிரம்பல் (Money Supply) என்பது ஏதேனுமொரு தினத்தில் நாட்டிலுள்ள பணத்தொகையாகும். இலங்கை மத்திய வங்கியால் நான்கு பணநிரம்பல்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

- குறுகிய பண நிரம்பல் - $M_1$
- விரிந்த பண நிரம்பல் - $M_2$
- திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் - $M_{2b}$
- மிக விரிவாக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் - $M_4$ (மத்திய வங்கியினால் $M_3$ பணநிரம்பலொன்று தொடர்பாகத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதில்லை.)

## குறுகிய பணநிரம்பல் ($M_1$)

குறுகிய பணநிரம்பல் ($M_1$) எனப்படுவது, பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயத் தினதும் பொது மக்களுக்குரியதாயுள்ள கேள்வி வைப்புக்களினதும் கூட்டுத்தொகையாகும். இது 2000 ஆம் ஆண்டில் ரூபா 119 பில்லியனாக இருந்ததோடு, 2001 ஆம் ஆண்டில் ரூபா 122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லியன் வரை 3.2% வீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது. 2000 ஆம் ஆண்டில் இருந்த 9% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகின்றபோது 2001 ஆம் ஆண்டின் குறுகிய பணநிரம்பலின் வளர்ச்சி குறைவாயிருந்தது. இதற்குக் காரணமாயமைந்த முதல் விடயம் யாதெனில், வட்டி ஈட்டாத சொத்துக்களை வைத்திருப்பதிலுள்ள அதிஉயர் அமயச் செலவுகளாகும். ஆதலால், மக்கள் சொத்துக்களை வட்டி ஈட்டக்கூடிய சொத்துக்களுக்கு மாற்றுவதில் ஆர்வ மாயிருந்தனர். இரண்டாவது விடயம், பொருளாதாரத்தில் ஏற்பட்ட சுருக்கத்தின் காரணமாக பணத்துக்கான கேள்வி (Demand for Money) குறைவடைந்தமையாகும். மூன்றாவது விடயம், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் கூடுதலாக தொழில்நுட்பம் சார்ந்ததாக மாறியதைத் தொடர்ந்து தன்னியக்கக் கூற்று அட்டைகளின் (ATM) பாவனை, கடன் அட்டைகள் மற்றும் வரவு அட்டைகளின் பாவனை ஆகியன அதிகரித்தமையாகும்.

குறுகிய பணநிரம்பலினுள் பொதுமக்களின் இவ்வாறான கேள்வி வைப்புக்களின் பங்களிப்பு (சதவீதம்) 2000 ஆம் ஆண்டில் 47% வீதமாயிருந்ததோடு, 2001 ஆம் ஆண்டில் 46% வீதம் வரை குறைந்த வீதத்தில் வீழ்ச்சியுற்றது. காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதன் தேவையை, அதாவது நாணயத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதன் தேவையை 2001 ஆம் ஆண்டில் குறிப்பாகக் காணக்கூடியதாயிருந்தமையே இதன் மூலம் தெளிவாகின்றது.

## விரிந்த பண நிரம்பல் ($M_2$)

குறுகிய பண நிரம்பலுடன் ($M_1$) பொதுமக்களுக்குரியதாக வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களைக் கூட்டுவதன் மூலம் விரிந்த பணநிரம்பல ($M_2$) கிடைக்கின்றது. 2000 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 405 பில்லியனாயிருந்த $M_2$, 2001 ஆம் ஆண்டில் ரூபா 451 பில்லியனாக மாறி 11% வீதத்தால் அதிகரித்தது. இது 2000 ஆம் ஆண்டின் 13 வீத அதிகரிப்புடன் ஒப்பிடப்படுகின்றபோது வளர்ச்சி வீதத்தில் குறைவைக் காட்டுகின்றது.

## திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$)

குறுகிய பண நிரம்பலுடன் ($M_1$), உள்நாட்டு வங்கிக் கூறுகளினதும் (DBU) வெளிநாட்டு நாணயக் கூறுகளினதும் (FCBUs) செயற்பாட்டை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்படுகின்ற திரட்டப்பட்ட பணநிரம்பல் 2001 ஆம் ஆண்டில் 13% வீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்கு ஏதுவாயிருந்த பிரதானமான காரணி யாதெனில், உள்நாட்டுக் கடன்களின் அதிகரிப்பும் செலாவணி வீதம் மதிப்பிறக்கமடைந்தமையுமாகும். உள்நாட்டுக் கடன் அதிகரிப்பில், அரசதுறையின் வங்கிகளிடமிருந்து கடன் பெறுதல் தீவிர அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2001 ஆம் ஆண்டில் சிறிதளவு தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பும், $M_{2b}$ அதிகரிப்பிற்கு ஏதுவாயமைந்தது (புள்ளிவிபர அட்டவணை 11).

11 வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையின் திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பலும் ($M_{2b}$) அதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளும்**

| நாணயக் கூட்டுக்கள் | பெறுமதி (ரூபா பில்லியன்) |
|---|---|
| குறுகிய பண நிரம்பல் - ($M_1$) | 122 |
| வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார் துறையின் தவணைமற்றும் சேமிப்பு வைப்புக்கள் | |
| 1. உள்நாட்டு வங்கிக் கூறுகள் | 395 |
| 2. வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகள் | 32 |
| திரட்டப்பட்ட பண நிரம்பல் ($M_{2b}$) | 549 |
| ஏதுக் காரணிகள் | |
| 1. உள்நாட்டுக் கடன்கள் | 639 |
| 2. வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) | 77 |
| 3. தேறிய நிதியல்லாத பொறுப்புகள் | (167) |
| ($M_{2b}$) இல் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளின் கூட்டுத்தொகை | 549 |

## மிக விரிவாக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_4$)

$M_4$ பண நிரம்பலாகக் கருதப்படுவது, $M_{2b}$ பண நிரம்பலுடன் உரிமம் பெற்ற விசேட வங்கிகளினதும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினதும் செயற்பாடுகள் உள்ளடங்கிய நிதி அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட பண நிரம்பலாகும். இது 2000 ஆம் ஆண்டில் 13% வீதத்தால் வளர்ச்சியடைந்தோடு 2001 ஆம் ஆண்டில் 14% வீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2001 ஆம் ஆண்டில் $M_4$ பண நிரம்பல் ரூபா 700 பில்லியனாயிருந்தது. இது $M_{2b}$ பண நிரம்பலை விட ரூபா 151 பில்லியன் அதிகமானதாகும். இதற்கான பிரதான காரணம் யாதெனில், தேசிய சேமிப்பு வங்கியிலும் நிதிக் கம்பனிகளிலும் பொதுமக்களுக்குரியதான வைப்புக்களின் தொகை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தமையாகும். $M_4$ மற்றும் அதற்கான ஏதுக்காரணிகளும் 12வது புள்ளிவிபர அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

12வது புள்ளிவிபர அட்டவனை

**$M_4$ பண நிரம்பலும் அதற்கான ஏதுக் காரணிகளும்**

| காரணி | பெருமதி (ரூபா பில்லியன்) |
|---|---|
| 1. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 66 |
| 2. உள்நாட்டுக் கடன்கள் | 840 |
| 3. தேறிய நிதியல்லாத பொறுப்புகள் | (206) |
| 4. காரணிகளின் கூட்டுத்தொகை (1+2+3) | 700 |

## நாணயக் கொள்கை (Monetary Policy)

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் நாணயக் கொள்கை வெறுமனே விலை உறுதிப்பாட்டின் (Price Stability) மீதும் நிதிச் சந்தையின் உறுதிப்பாட்டின் மீதும் தீவிர கவனம் செலுத்தியது. செலாவணி வீத முறை 2001 சனவரி 23 ஆம் திகதி சுகந்திரமாக மிதக்கும் செலாவணி வீத முறையொன்றில் பிரவேசித்தமை நிதிக் கொள்கை, விலை மற்றும் நிதிச் சந்தை நிலைப்பாட்டை நோக்கி நகர்வதற்குக் காரணமாயமைந்தது. குறிப்பாக, விலை உறுதிப்பாட்டு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பொதுவான நிதியியல் வேலைத்திட்டத்தின் உள்ளக இலக்கொன்றான ஒதுக்குப் பணம் (Reserve Money) மீது மத்திய வங்கி மிகக் கூடுதலான தடுத்து வைப்பை ஏற்படுத்தியது. பிரதானமாக பொதுமக்கள் மற்றும் வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயக் குற்றிகள் மட்டும் நாணயத் தாள்களின் தொகை மற்றும் வர்த்தக வங்கிகளினால் மத்திய வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத் தொகை ஆகியவற்றின் கூட்டுத்தொகையாகப் பொருள்கொள்ளப்படுகின்ற ஒதுக்குப் பணம் (இதற்கு தள நாணயம், அதிசக்தி வாய்ந்த நாணயம், நாணயத் தளம் ஆகிய சொற்களும் இடத்துக்குப் பொருத்தமாகப் பயன்படுத்தப்படுகின்றன.) 2001 ஆம் ஆண்டில் ரூபா 112.5 பில்லியனாக இருந்தது. இதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

| | |
|---|---|
| அரச (தேறிய) | 84.7 |
| வர்த்தக வங்கிகள் | 0.2 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) | 87.3 |
| ஏனையவை (தேறிய) | (59.6) |

2001 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியாகும்போது நிதிக் கொள்கைக் கருவிகளின் செயற்பாடுகளின் பொழிப்பை பின்வருமாறு காட்டலாம்.

- கொள்கை வட்டிவீதம் குறைக்கப்பட்டமை (குறிப்பாக திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவு வீதம் (Repo Rate) 12% வரையிலும் நேர் மாற்று மீள் கொள்வனவு வீதம் (Reverse Repo Rate) 14% வீதம் வரையிலும் குறைவடைந்தமை. மத்திய வங்கி வட்டி வீதம் 23% வரை குறைவடைந்தது. (இவை வருடத்தின் ஆரம்பத்தில் முறையே 20%, 23%, மற்றும் 25% வீதமாக இருந்தன.)
- நியதி ஒதுக்கு வீதம் (SRR) 10% வீதம் வரை குறைக்கப்பட்டமை.
- வங்கிகளுக்கிடையிலான திரவத் தன்மை யில் பற்றாக்குறையொன்று வருட ஆரம்பத்தின் போது நிலவியதோடு வர்த்தக வங்கிகள் இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவு கரும பீடத்தின் ஊடாக கடன் பெற்றமையும் மற்றும் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தமையும், ஐக்கிய அமெரிக்க டொலர்களின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை வெளியிட்டமை.

**மீள் கொள்வனவு வீதம்** எனப்படுவது. வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் தமது மேலதிக நிதியங்களை மத்திய வங்கியிலுள்ள திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்கின்றபோது செலுத்தப்படுகின்ற வட்டி வீதமாகும். நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பது, வர்த்தக வங்கிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் முதனிலை வணிகர்கள் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் பிணைக்கு வைத்து மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைப் பெறுகின்றபோது அறவிடப்படுகின்ற கருவியாகும். மத்திய வங்கி வீதம் எனப்படுவது சந்தை வீதங்களின் திசையைக் காட்டுகின்ற வீதமாகும்.

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளும்

2001 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் 25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இருந்தன. இதில் 11 வங்கிகள் உள்நாட்டு வங்கிகளாயிருந்ததோடு, 14 வங்கிகள் வெளிநாட்டு வங்கிகளாயிருந்தன. 2001 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் 14 உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் இருந்தன.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கி** என்பது, ஏனைய நிதிச் சேவைகளோடு வாடிக்கையாளர்கள் காசோலைகள் மூலம் பண அனுப்பல்களைச் செய்வதற்கும் விண்ணப்பித்த உடனேயே பணத்தை மீளப் பெறுவதற்கும் முடியுமாயுள்ள நடைமுறைக் கணக்குகளைப் பேணி வருவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்டுள்ள வங்கி நிறுவனங்களாகும். அதேபோன்று இவ்வங்கிகள் வட்டி செலுத்துகின்றதும் குறுகியகால அறிவிப்பின் மூலம் பணத்தை மீளப் பெறக்கூடியதுமான சேமிப்பு வைப்புக்களையும் தவணை வைப்புக்களையும் பேணி வருகின்றன. வெளிநாட்டுச் செலாவணி வணிகராகவும் இவை தொழிற்படுகின்றன.

**உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி** என்பது, வங்கிச் சட்டத்தின் மூலம் சிறப்பியல்புவாய்ந்த வங்கித் தொழிற்பாடுகளை நடத்திச் செல்வதற்கு இலங்கை மத்திய வங்கியிலிருந்து உரிமம் பெற்றுள்ள நிதி நிறுவனங்களாகும்.

2001ஆம் ஆண்டின் இறுதியில் 1,128 வர்த்தக வங்கிக் கிளைகள் இருந்ததோடு. வங்கிக்கன அளவு (அதாவது, 10,000 பேருக்குச் சேவை வழங்குகின்ற வங்கிகளின் எண்ணிக்கை) 0.06 ஆக இருந்தது. உரிமம் பெற்ற சிறப்பியல்வுவாய்ந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 327 ஆகும்.

## விலை மட்டம்

உத்தியோகபூர்வ விலைச் சுட்டடெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு ஏற்ப 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் பணவீக்க வீதம் (Rate of Inflation) 14.2% வீதமாகும். இது 1997 இல் இருந்து காணக்கூடியதாயிருந்த விலைகள் வீழ்ச்சியுறும் போக்கு மாற்றத்துக்குள்ளானதொரு சந்தர்ப்பமாயிருந்தது மாத்திரமன்றி, அன்றுவரை இருந்த தனி இலக்கத்திலான பணவீக்க வீதம் இரட்டை இலக்க மட்டத்திற்குள்ளாகியதொரு சந்தர்ப்பமாகவும் இருந்தது. இந் நிலைமை வருடாந்த விலை மாற்றங்களை அளவிடுவதற்கு உபயோகிக்கப்படும் அனைத்துச் சுட்டெண்களின் மூலமும், அதாவது பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (பா.கொ.நு.வி.சு.), கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.மா.நு.வி.சு.), மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (மொ.வி.வி.சு.), மொத்தத் தேசிய உற்பத்தியின் அறியத்தக்க மதிப்பிறக்கம் (மொ.தே.உ.ம.), மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பிறக்கம் (மொ.உ.உ.ம.) ஆகிய விலைச் சுட்டெண்களின் மூலம் பிரதிபலித்தன. (13வது புள்ளிவிபர அட்டவணை) 2001 ஆம் ஆண்டில் பணவீக்க வேகம் 14.2% வீதம் வரை அதிகரித்ததொரு மட்டத்திற்கு வருவதற்கு ஏதுவாயிருந்த காரணிகள் பல உள்ளன.

- சர்வதேச விலைகளின் மாற்றத்திற்கு இணங்க நிருவகிக்கப்பட்ட விலைகள் மாற்றப்பட்டமை.
- வரட்சியின் காரணமாக உள்நாட்டு உணவு வகைகளை வழங்குவதில் தடைகள் ஏற்பட்டமை.
- சர்வதேச விலைகள் அதிகரித்ததன் காரணமாக இறக்குமதிப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமை.
- இறக்குமதியின் மீது சுங்கத் தீர்வைகளும் மேன்மிகையும் அதிகரித்தமை.
- பொருட்களின் சர்வதேச விலைகள் அதிகரித்தமை.
- நாணயத்தின் வெளிவாரியான பெறுமதி குறைந்தமை. (அமெரிக்க டொலருக்கு இணைக்கப்பட்டு 11% வீதத்தால் பெறுமதி குறைந்தமை.)

இக்காரணிகள் மூலம் காணக்கூடியது யாதெனில், 2001ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலையேற்றம் பிரதானமாக வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறையினாலும் மற்றும் ஆகு செலவினால் உந்தப்பட்ட காரணிகளின் தாக்கத்தினாலும் உருவாகியதென்பதாகும். 2001 ஆம் ஆண்டில் நாணய வழங்கலின் விரிவாக்கம், பெயரளவிலான வருமானம் அதிகரித்ததைத் தொடர்ந்து நடுநிலைக்கு வந்ததன் காரணத்தினால் கேள்வியினால் ஏற்பட்ட காரணிகளின் தாக்கங்கள் பணவீக்கத்துக்குக் காரணமாயமையவில்லை.

**பணவீக்கம்** (Inflation) என்பது, பணத்தின் கொள்வனவுச் சக்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பொது விலை மட்டத்தின் அதிகரிப்பாகுமென்பதோடு, இது வருடாந்தம் விலைச் சுட்டெண்களைப் பயன்படுத்திக் கணிப்பீடு செய்யப்படுகின்ற **பணவீக்க வேகம்** (Rate of Inflation) மூலமே அளவிடப்படுகின்றது. பணவீக்கம் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் பாதிப்பான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதாவது, பொருளாதாரத்தின் உண்மைத் துறைகளில், அரச நிதியியல் தொழிற்பாடுகளில், வெளிநாட்டுத் துறைகளில், நுகர்வில், முதலீடுகளில், சம்பளத்தில், தொழில்நிலையில், வருமானப் பரம்பலில், வட்டி வீதங்களில், சேமிப்புக்களில் இது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன்படி பணவீக்கத்தை தவறுகளற்ற விதத்தில் கணிப்பீடு செய்வது அத்தியாவசியமாகும். இதற்காக இலங்கையில் தற்போது அமுலிலுள்ள விலைச் சுட்டெண்களுக்கு மேலதிகமாக பணவீக்கத்தை உரிய முறையில் அளவிடுகின்ற, மிகவும் அர்த்தமுள்ள சுட்டெண்ணாக முழு இலங்கையையும் உள்ளடக்கக்கூடிய விதத்திலான மேம்படுத்தப்பட்ட இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. (2002, ஏப்ரில் குறிப்பேட்டில் திரு. வில்சன் மர்வின் பர்ணாந்துவினால் எழுதப்பட்ட நடைனாவிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் என்ற கட்டுரையைப் பார்க்கவும்) சுருக்கமாக, இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை ஏனைய விலைச் சுட்டெண்களோடு ஒப்பிடுகின்ற அதேநேரம் (1வது அட்டவணை) புதிய விலைச் சுட்டெண்ணின் முக்கியத்துவத்தினைப் பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

13வது புள்ளிவிபர அட்டவணை

**ஆண்டுச்சராசரி விலை மாற்றங்கள் (%)**

| ஆண்டு | கொ.நு.வி.சு. | பா.கொ.நு.வி.சு. | கொ.மா.நு.வி.சு. | மொ.வி.வி.சு. | மொ.தே.உ.ம. | மொ.உ.ம. |
|---|---|---|---|---|---|---|
| 1980 | 26.6 | - | - | 33.7 | 18.2 | 18.1 |
| 1981 | 18.0 | - | - | 17.0 | 20.6 | 20.6 |
| 1982 | 10.8 | - | - | 5.5 | 10.2 | 9.9 |
| 1983 | 14.0 | - | - | 25.0 | 14.7 | 14.6 |
| 1984 | 16.6 | - | - | 25.6 | 17.4 | 17.1 |
| 1985 | 1.5 | - | - | -15.2 | 0.8 | 0.9 |
| 1986 | 8.0 | - | - | -2.9 | 5.5 | 5.8 |
| 1987 | 7.7 | - | - | 13.4 | 6.8 | 6.5 |
| 1988 | 14.0 | - | - | 17.8 | 11.5 | 11.5 |
| 1989 | 11.6 | - | - | 9.0 | 9.7 | 9.6 |
| 1990 | 21.5 | 24.6 | - | 22.2 | 20.0 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | - | 9.2 | 11.2 | 11.0 |
| 1992 | 11.4 | 9.4 | - | 8.8 | 10.0 | 10.0 |
| 1993 | 11.7 | 8.4 | - | 7.6 | 9.5 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | - | 5.0 | 9.4 | 9.3 |
| 1995 | 7.7 | 3.9 | - | 8.8 | 8.4 | 8.4 |
| 1996 | 15.9 | 14.7 | - | 20.5 | 12.2 | 12.1 |
| 1997 | 9.6 | 7.1 | 7.4 | 6.9 | 8.7 | 8.6 |
| 1998 | 9.4 | 6.9 | 7.3 | 6.1 | 8.4 | 8.4 |
| 1999 | 4.7 | 3.8 | 3.6 | -0.3 | 4.4 | 44 |
| 2000 | 6.2 | 3.2 | 3.6 | 1.7 | 6.7 | 6.7 |
| 2001 | 14.2 | 11.0 | 10.3 | 11.7 | 12.9 | 13.0 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1வது அட்டவணை**

**இலங்கையில் மாதாந்தம் கணிப்பீடு செய்யப்படுகின்ற விலைச் சுட்டெண்கள் தொடர்பான சுருக்கமான தகவல்கள்**

| விலைச் சுட்டெண் | அடிப்படைத் தகவல் தொடர்பான மூலங்கள் | அடிப்படை காலப்பகுதி | பூகோளப் பிரதேசம் | வருமானப் பிரிவு | மாதிரிக் குடும்பங்கள் | நுகர்வுப் பொருட்களின் எண்ணிக்கை | விலை சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கொ.நு.வி.சு. | தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம் குடும்பச் செலவு மதீப்பீடு 49/50 | 1952 | கொழும்பு மாநகர சபை | மாதாந்த வருமானம் ரூபா 55 - ரூபா 485 வரை | 455 குடும்பங்கள் | 187 | 7 |
| பா.கொ.நு.வி.சு. | தொழிற்படை மற்றும் சமூக, பொருளாதார மதிப்பீடு 1985/86 | 1989 சன. 1989 ஜூன். | பாரிய கொழும்பு பிரதேசம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 419 குடும்பங்கள் | 217 | 15 |
| கொ.மா.நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக். 1997 செப். | கொழும்பு மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 383 செலவுக்கூறுகள் | 197 | 11 |
| அநுராதபுரம் நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக். 1997 செப். | அநுராதபுரம் மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 172 செலவுக்கூறுகள் | 162 | 06 |
| மாத்தளை நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக். 1997 செப். | மாத்தளை மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 119 செலவுக்கூறுகள் | 142 | 03 |
| மாத்தரை நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக். 1997 செப். | மாத்தரை மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 178 செலவுக்கூறுகள் | 176 | 06 |
| மே.மா.நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக். 1997 செப். | மேல் மாகாணம் | கீழ்நிலையிலுள்ள 65% | 1,932 செலவுக்கூறுகள் | 217 | 15 |
| இல.நு.வி.சு. | தொ.ம.பு.தி. வருமான செலவின மதிப்பீடு 1995/96 | 1995 1997 | வட கிழக்கு மாகாணம் தவிர்ந்த முழு நாடும் | கீழ்நிலையிலுள்ள 80% (செலவுகள்) | 1,6031 குடும்பங்கள் | 174 | 34 (கிழக்கு மாகாணம் உட்பட) |

- புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் முழுப் பொருளாதாரத்தினதும் நுகர்வோர் விலை ஏற்றத்தினை அளவிடுவதற்கு உண்மையானதும் காலத்திற்கேற்றதுமான அளவையொன்றை வழங்குகின்றது. இது தற்போதுள்ள ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்களை விட சிறந்ததொரு உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாது அவற்றின் பணவீக்க அளவைகளோடும் பொருந்துகின்றது.
- மாறுபடுகின்ற நுகர்வோர் ஒழுங்குமுறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதிலிருந்து தூர விலகிச் செல்கின்றபோதுகூட பயன்படுத்தப்பட்ட முன்னைய நுகர்வோர் விலைச் சுட்டெண்களைப் போலல்லாது, ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒருமுறை நிறையேற்றல்களைப் புதுப்பிப்பதற்காக அப்போதைக்குள்ள நீண்ட காலத் திட்டங்களின் கீழ் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் நீண்டகாலத்துக்கு அர்த்தமுள்ளதாக நிலைத்திருக்கும்.
- தற்போதுள்ள நுகர்வோர் விலைச் சுட்டெண்களிலுள்ள பலவீனங்களைச் சிறப்பாகப் புரிந்து கொண்டுள்ள நிலைமைகளின் கீழ் புதிய இலங்கைநுகர்வோர் விலைச் சுட்டெண் மக்களின் வரவேற்பை மிக விரைவாகப் பெறக்கூடிய சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.
- திட்ட வரைஞர்களாலும் பொதுமக்களாலும் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்டு பரீட்சித்தல் காலம் (6 மாதங்கள் தொடக்கம் ஒரு வருடம் வரையிலான காலம்) முடிவடைந்ததன் பின்னர் ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்களைப் பிரசுரித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.
- கடந்த காலங்களில் புதிய விலைச் சுட்டெண்கள் மக்கள் வரவேற்பைப் பெறாதமை தொடர்பான தடுப்புமுறை அனுபவத்தின் கீழ் (உதாரணமாக, 1989, பாரிய கொழும்பு விலைச் சுட்டெண்) குடும்பங்கள், தொழில் முயற்சிகள், தொழில் முயற்சி அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் ஆகியன இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை வரவேற்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமானதாயிருக்கும்.

## கூலிச் சுட்டெண்கள்

பண்டங்கள் சந்தையில் விலை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளதோ, அதேபோன்று காரணிச் சந்தையின் முக்கியமானதொரு உப சந்தையான தொழிற்சந்தையில் கூலி முக்கியம் வாய்ந்ததாயுள்ளது. இதனை நாணயக் கூலி (Money Wages) மற்றும் உண்மைக் கூலி (Real Wages) என இரண்டு விதத்தில் ஆராயலாம்.

நாணயக்கூலி என்பது பணமாகக் கைக்குக் கிடைக்கின்ற கூலியாகும். உண்மைக்கூலி என்பது நாணயக் கூலியின் கொள்வனவுச் சக்தியாகும். உண்மைக் கூலியைப் பின்வருமாறு கணிப்பிடுகிறோம்.

$$\frac{\text{நாணயக்கூலி}}{\text{கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்}} \times 100$$

இலங்கையின் கூலி தொடர்பான மாற்றங்களை பிரதானமான இரண்டு தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு, அதாவது அரச துறை மற்றும் தனியார் துறை எனவும், தனியார் துறையை மீண்டும் முறைசார்ந்த தனியார் துறை மற்றும் முறைசாரா தனியார் துறை எனவும் இரண்டு வகையாக வகைப்படுத்தலாம். 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் அதிகரித்துச் சென்ற பணவீக்க நிலைமைகளின் கீழ் அரச துறையினதும், தனியார் துறையினதும் கூலிகளின் போக்கு இக் காலப்பகுதியினுள் இரண்டு திசைகளை நோக்கியதாயிருந்தது. தற்போதுள்ள சுட்டெண் களுக்கு ஏற்ப அரச துறையில் குறைந்த கூலிகளைப் பெறுகின்ற குழுவினர் இரண்டு வருடங்களினுள்ளும் குறிப்பிடத்தக்கதொரு உண்மைக்கூலி அதிகரிப்பைப் பெற்றார்களென் பதோடு, தனியார் துறையில் பொதுவாக உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்தன. அதிகரித்துச் செல்கின்ற பணவீக்க நிலைமைகளின் கீழ் வீழ்ச்சியுறுகின்ற உண்மைக்கூலியின் முன்னிலையில் அதற்கு நேரொத்த விதத்தில் நாணயக் கூலியை அதிகரித்தல் தொடர்பாக தொழிற்சங்கங்களிலிருந்து நிர்ப்பந்தங்கள் ஏற்படக்கூடியதாயிருந்தபோதிலும், திருப்திகரமற்ற பொருளாதார நிலைமைகளின் கீழ், நடைபெற்றுவந்த சேவைகள் இடைநிறுத்தப் படக்கூடுமென்ற அச்சுறுத்தலின் முன்னிலையில் இப்பிரச்சினை மேலெழுதல் ஓரளவு தடுக்கப் பட்டதெனக் கருதலாம். இதனடிப்படையில் எதிர்காலத்தில் அதிகூடிய கூலி தொடர்பான வேண்டுகோள்களின் காரணமாக ஏற்படுகின்ற பணவீக்கம், கூலி அதிகரிப்பு, பணவீக்கம் என்ற விஷமச் சுழற்சியைத் தவிர்ப்பதற்கெனில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

## சர்வதேச வர்த்தகம் (International Trade)

சர்வதேச கேள்வியில் தீவிர வீழ்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் 16% வீதமான வீழ்ச்சியொன்று 2001 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இது, ஏற்றுமதி 13% வீதத்தால் குறைவடைந்தமை மற்றும் இறக்குமதி 18% வீதத்தால் குறைவடைந்தமையின் இணைந்த பெறுபேறாகும். இதன் பெறுபேறாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை நிலுவை, அமெரிக்க டொலர் 1,157 மில்லியனாக இருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதியில் 7% வீதமாகும். இலங்கையின் ஏற்றுமதிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31% வீதமாயிருந்த தோடு, இறக்குமதிகள் 38% வீதமாகியிருந்தன. இதன்படி இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் தங்கியிருப்பதென்பதை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 70% வீதத்துக்கு அண்மிய பாரியதொரு சதவீதம் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது. இதன் காரணமாக உலக சந்தையில் ஏற்படுகின்ற பாதகமான அதிர்ச்சிகள் இலங்கையைக் கடுமையாகப் பாதிக்கின்றன. இதன்படி 2001 உலக பொருளாதார நிலைமை பாதிப்புக்குள்ளானமை, உள்நாட்டு உறுதியற்ற அரசியல் நிலவரங்கள் மற்றும் பொருளாதாரப் பின்னடைவு ஆகியன இலங்கையின் வெளிநாட்டுத் துறையின்மீது பாதிப்பான தாக்கத்தை ஏற்படுத்திய விடயங்களாகும்.

## ஏற்றுமதி உள்ளமைப்பு


ஏற்றுமதியை தொகுதிகள் ரீதியாகவும் பண்டங்கள் ரீதியாகவும் வகைப்படுத்தலாம். தொகுதி ரீதியாக ஏற்றுமதியை 4 வகையாகப் பிரித்துக் காட்டலாமென்பதோடு, 2001 ஆம் ஆண்டின் அதன் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.


| | | |
|---|---|---|
| 1. | கமத்தொழில் ஏற்றுமதிகள் | 19% |
| 2. | கைத்தொழில் ஏற்றுமதிகள் | 77% |
| 3. | வர்த்தகரீதியிலான ஏற்றுமதிகள் | 2% |
| 4. | வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள் | 2% |

கடந்த தசாப்தத்தினுள் ஏற்றுமதி உள்ளமைப்பின் மாற்றங்களை 8 வது வரைபடம் காட்டுகின்றது.

8வது வரைபடம்

**முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிப் பெறுமதி**




இதற்கிணங்க, இலங்கையின் பிரதானமான ஏற்றுமதி வகை, 77% வீதப் பங்களிப்பை வழங்குகின்ற கைத்தொழில் ஏற்றுமதியாகும். (Industrial Exports). இதில் 53% வீதம் துணிவகைகளும் ஆடைகளுமாகும். ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளில் இயந்திர உபகரணங்கள், கருவிகள், வைரம், நகைகள், இறப்பர் தயாரிப்புகள், உணவு பானங்கள், புகையிலை போன்றவை பிரதானமான இடத்தை வகிக்கின்றன. இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகள் 1977 இல் தாராளமயப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே குறிப்பிடத்தக்களவு விரிவடையத் தொடங்கின. இதன் பெறுபேறாக 1986 ஆம் ஆண்டாகும்போது கமத்தொழில் ஏற்றுமதித் துறையை விஞ்சும் விதத்தில் கைத்தொழில் ஏற்றுமதித்துறை பிரதானமான ஏற்றுமதி வகையாக மாறியது. 1997 ஆம் ஆண்டில் 14% வீதமாயிருந்த கைத்தொழில் ஏற்றுமதி, 2001 இல் 77% வீத அதிக சதவீதமொன்றைக் காட்டியதோடு. கடந்த தசாப்தத்தினுள் அதன் பங்களிப்பு 75% வீதமாக இருந்தது. இக் காலகட்டத்தினுள் துணிவகைகளினதும் ஆடைகளினதும் ஒப்பீட்டு முக்கியத்துவம் கைத்தொழில் ஏற்றுமதியினுள் 67% - 68% வீதமாயிருந்தது. எஞ்சிய சதவீதங்கள் ஒரு சில கைத்தொழில் துறைகளுக்குப் பகிர்ந்து சென்றன. (9வது வரைபடம்) எவ்வாறாயினும், மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 2/3 பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற துணிவகைகள் மற்றும் ஆடை ஏற்றுமதி முகங்கொடுக்கின்ற ஒரு சில பிரச்சினைகள் பின்வருமாறு:

- கைத்தொழில் நாடுகளில் (அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்) நிலவுகின்ற குறைந்த கேள்வி.
- உப சஹாரா வலயத்தில் எழுச்சியடைந்து வருகின்ற ஆடை உற்பத்தியாளர்களிடமிருந்து (அமெரிக்காவின் சுங்க வரிச் சட்டத்தின் கீழ் அமெரிக்காவில் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள) ஏற்படுகின்ற போட்டி நிலை, அவர்களுக்கு இலாபகரமான உழைப்பு கிடைப்பதன் காரணமாக இச் சவால் மிகக் கடுமையானதாயுள்ளது.
- இலங்கையானது, ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்ற அளவைவிட, கூடுதலான அளவு தங்கி வாழ்வதன் காரணமாக (மொத்த ஏற்றுமதிகளில் 50% வீதமானவை) 2005 ஆம் ஆண்டாகும்போது படிப்படியாக பல் இழைய உடன்படிக்கை (Multifiber Aggremetn) நீக்கப்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமை.
- இலங்கையின் ஆடைகள் சந்தை அமெரிக்காவுக்கும் (64%) ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகளுக்கும் (30%) மாத்திரம் மட்டுப்பட்டுள்ளமையினால் அந்நாடுகளின் பொருளாதார அதிர்ச்சி இலங்கையின் ஆடைகள் சந்தையில் பாதிப்பான தாக்கத்தை ஏற்படுத்துதல்.

இலங்கையின் ஆடைகள் ஏற்றுமதியில் 90% வீதமானவை முதலீட்டுச் சபை (BOI) நிறுவனங்களின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கின்றன. இலங்கையின் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் 2001 ஆம் ஆண்டில் 10% வீதத்தால் வீழ்ச்சியுற்றன. கமத்தொழில் ஏற்றுமதி 2001 ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 19% வீதமாயிருந்தது. 1991 ஆம் ஆண்டில் இலங்கையின் கமத்தொழில் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதியில் 31% வீதமாயிருந்ததோடு, இதன் ஒப்பீட்டு முக்கியத்துவம் கடந்த தசாப்தத்தினுள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. கமத்தொழில் ஏற்றுமதியில் 74% வீதமானவை தேயிலை ஏற்றுமதியாகும். கடந்த தசாப்தத்தினுள் சிறு கமத்தொழில் ஏற்றுமதிகளில், குறிப்பாக கறுவா, பதப்படுத்தப்படாத புகையிலை, மிளகு, கராம்பு, மரக்கறி மற்றும் பழவகைகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டதோடு, இவற்றின் ஒப்பீட்டு முக்கியத்துவம் இறப்பர் மற்றும் தேங்காய் ஏற்றுமதியின் முக்கியத்துவத்தைத் தாண்டிச் சென்றுள்ளது. 2001ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதியின் ஒப்பீட்டு முக்கியத்துவம் மொத்த ஏற்றுமதி வருமானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14% வீதமாயிருந்ததோடு, தேங்காய் மற்றும் இறப்பர் 1% வீதமாயிருந்தன. சிறு கமத்தொழில் ஏற்றுமதிகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் மொத்த ஏற்றுமதியில் 3% வீதமாகும்.

## இறக்குமதி உள்ளமைப்பு

விமான இறக்குமதிக்கு சீர்செய்யப்படாத இறக்குமதி 18% வீதத்தால் குறைந்தது. இது பிரதானமாக முதலீட்டுப் பொருட்கள் (38% வீதத்தால்), பெற்றோலியம், புடைவைகள் போன்ற இடைநிலைப் பொருட்கள் (32% வீதத்தால்), நுகர்வுப் பொருட்கள் (11% வீதத்தால்), இறக்குமதியில் பிரதிபலித்தது. இவ் வீழ்ச்சி எதிர்கால பொருளாதார வளர்ச்சியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இறக்குமதி உள்ளமைப்பைப் பிரதானமாக நான்கு தொகுதிகளாப் பிரித்துக் காட்டலாம்.

- நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி, உதாரணம்:- அசிரி, சீனி, கோதுமை.
- இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி, உதாரணம்:- பெற்றோலியம், புடைவைகள், உரம், இரசாயனப் பொருட்கள்.
- முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி, உதாரணம்: இயந்திர உபகரணங்கள்.
- வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதி உள்ளமைப்பில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 21% வீதமாயிருந்ததோடு, இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி முறையே 57% வீதமாகவும் 18% வீதமாகவும் இருந்தன. 1977 இல் தாராளமயப் பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து பார்க்கின்றபோது கடந்த 25 ஆண்டு காலத்தினுள் இலங்கையின் இறக்குமதி உள்ளமைப்பு நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி யிலிருந்து இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியை நோக்கி நகர்ந்தது. இதற்கான பிரதானமான காரணம் அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் உள்நாட்டு நிரம்பல் அதிகரித்தமையாகும். மறுபுறம் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட விரிவாக்கமும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிக் கேள்வியின் அதிகரிப்புக்கு ஏதுவாயிருந்ததோடு, அடித்தள வசதிகள், நிர்மாணிப்பு மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் முன்னேற்றம் ஆகியனவும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பதற்குக் காரணமாயமைந்தன. இலங்கையில் 2001 இல் இறக்குமதிகளின் உள்ளடக்கம் 14வது புள்ளிவிபர அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## வர்த்தகத்தின் போக்கு

2001 இல் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் வர்த்தகப் போக்கில் (Trade Direction) குறிப்பாகக் காணக்கூடியதாயிருந்த பண்புகள் வருமாறு:

- கைத்தொழில் நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதானமான சந்தைகளாக மாறி 75% வீதமான சந்தைப் பங்களிப்பைக் காட்டியமை.

14வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையில் இறக்குமதி உள்ளமைப்பு**

| பொருட்கள் | மொத்த இறக்குதிகளின் % |
|---|---|
| A. நுகர்வுப் பொருட்கள் | 19% |
| உணவு, குடிபான வகைகள் (அரிசி, சீனி, மாவு, பால் உற்பத்திகள்) | 9% |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் (மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள், வானொலி, தொலைக்காட்சி) | 10% |
| B. இடைநிலைப் பொருட்கள் | 57% |
| பெற்றோலியம் | 12% |
| புடைவைகள் | 22% |
| கடதாசி | 3% |
| ஏனையவை (உரம், இரசாயனப் பொருட்கள், நிறம் தீட்டுபவை, கோதுமை மணிகள்) | 20% |
| C. முதலீட்டுப் பொருட்கள் | 18% |
| கட்டிடப் பொருட்கள் | (4%) |
| போக்குவரத்துக் கருவிகள் | (2%) |
| இயந்திர உபகரணங்கள் | (10%) |
| ஏனையவை | (2%) |
| **மொத்த இறக்குமதி** | 100 |

- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைக்கான பங்களிப்பு 21% வீதமாகியிருந்தமை.
- கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைக்கான பங்களிப்பு 4% வீதமாயிருந்தமை.
- இலங்கைக்குக் கூடுதலாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகளிடையே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நிரம்பல் பங்களிப்பு 67% வீதமாயிருந்ததோடு, கைத்தொழில் நாடுகளின் பங்களிப்பு 33% வீதமாயிருந்தமை.
- சார்க் நாடுகள் மொத்த ஏற்றுமதிகளுக்கு 3% வீதத்தாலும் இறக்குமதிகளுக்கு 13% வீதத்தாலும் பங்களிப்புச் செய்தமை.
- 1979 இல் இருந்து இலங்கையின் பிரதானமான மிகப் பெரும் கொள்வனவாளராக (41%) அமெரிக்கா மாறியமை அத்துடன் இதில் 78% வீதமானவை புடவைகளும் ஆடைகளுமாயி ருந்தமை.
- வலயத்தில் இருதரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில், குறிப்பாகக் காணக்கூடியதாயுள்ள பண்புகள் பின்வருமாறு:

- 2001 ஆம் ஆண்டின் சந்தை மற்றும் தீர்வை வரிக்கொள்கை ஏற்றுமதித் துறையின் போட்டித் தன்மையை வளர்ச்சியடையச் செய்வதற்கு ஏற்ற சூழலொன்றை உருவாக்கியுள்ளமை.
- 2001 நவம்பர் 21 ஆம் திகதி ஒரு சில இறக்குமதிப் பொருட்களின் மீது மிகைவரி விதிக்கப்பட்டமை. இது 2001 திசெம்பர் 31ஆம் திகதி வரை அமுலில் இருந்தது.
- ஐரோப்பிய ஒன்றியம் புடைவைகள், ஆடைகளின் இறக்குமதியில் விதித்திருந்த பல்வேறு கட்டுப்பாடுகளையும் 2001.01.01ஆம் திகதியிலிருந்து நீக்கியமை. ஆயினும் தேவையான ஏற்றுமதி உரிமச் சீட்டை (Export Visa) அதற்காகப் பெற்றிருத்தல் வேண்டும்.
- போலி ஏற்றுமதி உரிமச் சீட்டு மற்றும் மூலச் சான்றிதழ் (Certificate of Origin) வழங்குதலைத் தவிர்க்கும் நோக்கத்துடன் புடைவைகள் அனுமதிப் பங்குச் சபையினால் இலத்திரன் தரவுப் பரிமாற்றல் முறையொன்று (Electronic Data Exchange System). 2001 செப்தெம்பர் மாதம் 1 ஆம் திகதி அறிமுகப்படுத்தப் பட்டமை.
- 2005 இல் பெருந்தொகையான அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள் ஒரே தடவையில் நீக்கப்படுகின்றபோது முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு ஒருசில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை.

## இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முன்னேற்றம்

1998 திசெம்பர் மாதம் 28ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2000 ஆம் ஆண்டிலிருந்து செல்லுபடியாகும் விதத்தில் அமுலாக்கப்பட்ட இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2001 ஆம் ஆண்டினுள் இலங்கை இந்தியாவுக்கு அனுப்பிய மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி அமெரிக்க டொலர் 16 மில்லியனாய் இருந்ததோடு இது 2001 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட மொத்த ஏற்றுமதியில் 23% வீதமாகும். இந்த ஏற்றுமதிகளிடையே கழிவுத்தாள், கணனிப் பாகங்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி இயந்திரங்கள், பொதி செய்வதற்குப் பயன்படுத்துகின்ற கடதாசி, உணவுக்காகப் பதப்படுத்தப்பட்ட இறைச்சி உற்பத்திகள் ஆகியன பூரண வரிச் சலுகைகளைப் பெற்ற ஏற்றுமதிகளாகும். தேயிலை, மெருகூட்டப்பட்ட பளிங்குக் கற்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி இயந்திரம், இரசாயன உற்பத்திகள், போசிலேன் பீங்கான் பொருட்கள் ஆகியவற்றுக்கு 50% வீதமான தீர்வை வரிச் சலுகைகள் கிடைத்தன.

வர்த்தக உடன்படிக்கை அமுலாக்கப் பட்டதன் பின்னர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புதிய பொருட்கள் பல உள்ளன. இறப்பர் செருப்பு, கணனிப் பாகங்கள், இரசாயன உற்பத்திகள், கட்டிட அலங்காரப் பொருட்கள் ஆகிய துணைப் பாகங்களும், கோவை இணைப்புக்கள், மருந்தாக்கல் உற்பத்திகள் ஆகியனவும் இவற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. எவ்வாறாயினும், 2001 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து செய்யப்பட்ட மொத்த இறக்குமதிகளின் பெறுமதி அமெரிக்க டொலர் 601 மில்லியனாயிருந்ததோடு, இதில் தடுப்புரிமைப் பட்டியலுக்கான முதலீட்டு இறக்குமதிகளின் பெறுமதி அமெரிக்க டொலர் 210 மில்லியனாயிருந்தது. தடுப்புரிமைப் பட்டியலுக்குரியதல்லாத பொருட்களின் இறக்குமதி அமெரிக்க டொலர் 391 மில்லியனாயிருந்தது (15ஆவது புள்ளிவிபர அட்டவணை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15வது புள்ளிவிபர அட்டவணை

**வருடாந்த நூற்றுவீத மாற்றங்கள்**

| | 2000 | 2001 | 2002 (எதிர்வு கூறல்) |
|---|---|---|---|
| உலகப் பொருளாதார வளர்ச்சி | 4.7 | 2.5 | 2.8 |
| உலக வர்த்தகத்தின் இயலளவு | 12.4 | -0.2 | 2.5 |
| **நுகர்வு விலைகள்** | | | |
| அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் | 11.7 | -1.3 | 0.9 |
| அபிவிருத்தியடையும் பொருளாதாரங்களில் | 15.0 | 3.0 | 4.8 |

## இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில்

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் வருகை, 16% வீதத்தால் வீழ்ச்சியுற்று, 336,794ஆக இருந்தது. சுற்றுலாப் பயணிகளிடமிருந்து மொத்த உழைப்பாக அமெரிக்க டொலர் 213 மில்லியன் கிடைத்தது. 2001ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும், உழைப்பும் வீழ்ச்சியுறுவதற்கும் பல காரணிகள் ஏதுவாயிருந்தன.

- 2001 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்.
- 2001 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்.
- ஆப்கானிஸ்தானில் உருவாகிய யுத்த சூழல்.
- மக்கள் கருத்துக் கணிப்பு மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக உருவாகிய அரசியல் நிலைப்பாடின்மை.

2001 ஆம் ஆண்டில் அனைத்து முக்கியமான வலயங்களிலிருந்தும் வருகைதந்த சுற்றுலாப் பயணிகளினதும் எண்ணிக்கை குறைவடைந்ததோடு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் இரவு வேளைகள் 23% வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அறைகளைப் பயன்படுத்துகின்ற நூற்றுவீதம் 42% வீதத்தால் வீழ்ச்சியுற்றதோடு, பொதுவாக உல்லாசப் பிரயாணி ஒருவர் நாட்டினுள் தங்கியிருக்கின்ற காலம் 2001 இல் 10 நாட்கள் வரை வீழ்ச்சியுற்றது. நேரடியாகவும் மறைமுகமாகவும் உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலில் சேவையிலீடுபட்டிருந் தோர்களின் தொகை 85,063 ஆகும்.

## சர்வதேச பொருளாதாரச் சூழல்

2001 ஆம் ஆண்டில் உலக பொருளாதாரம் கடுமையான பொருளாதார மந்தநிலைக்கு உள்ளாகியது. பொருளாதார மந்தநிலை என்பது, வருடாந்த உலகப் பொருளாதார வளர்ச்சி 2.5% வீதத்தைவிடக் குறைவடைவதையே குறிக்கின்றது. 2001 ஆம் ஆண்டில் உலக பொருளாதாரத்தின் வெளியீட்டு வளர்ச்சி 2.5 வீதமாயிருந்தது. இது இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவெனக் கருதப்படுகின்றது. இதன் பெறுபேறாக வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டுச் சேவைத்துறை, வெளிநாட்டு மூலதனம் மற்றும் வெளிநாட்டு விலைகள் வீழ்ச்சியுற்றன.

உலக பொருளாதாரப் பின்னடைவில் பொருளாதார எதிர் விளைவுகள் பலவுள்ளன.

- உலக வர்த்தகத்தின் இயலளவு தீவிரமாகக் குறைவடைந்தமை.
- முதலீட்டாளர்கள் இடர்களைத் தாங்கு வதிலிருந்து விலகியிருந்தமை.
- சர்வதேச வட்டிவீதங்கள் குறைந்தமை.
- மேலெழுகின்ற சந்தைப் பொருளாதாரங்களின் பொருளாதாரக் கோட்பாடுகள் வீழ்ச்சியுற்றமை. (Emerging Market Economics)
- முக்கியமான நாடுகளில் வெளிநாட்டுச் செலாவணி வீதங்களின் ஒன்றுடனொன்று பொருந்தாத நிலை அதிகரித்தமையும் அதன் காரணமாக பேரண்டப் பொருளாதார சமமின்மை ஒன்று திரண்டமையும்.
- அபிவிருத்தியடையும் நாடுகளில் வர்த்தக வீதங்கள் வீழ்ச்சியுற்றமை.

## இலங்கையின் சென்மதி நிலுவை (Balance of Payment in Sri Lanka)

இலங்கையின் சென்மதி நிலுவையின் மொத்த நிலுவை கடந்த இரண்டு வருடங்களினுள் தொடர்ந்து இருந்து வந்த பற்றாக்குறைகளுக்கு எதிராக 2001ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 220 மில்லியன் மிகையொன்றை அறிக்கையிட்டது. இது வர்த்தக நிலுவையின் அமெரிக்க டொலர் 1,157 மில்லியன் பற்றாக்குறை, பணிகள் கணக்கின் (தேறிய) 108 மில்லியன் மிகை, வருமானக் கணக்கின் (தேறிய) 280 மில்லியன் பற்றாக்குறை தனியார் மாற்றல்கள் மற்றும் அலுவல்சார் மாற்றல்கள் கணக்குகளின் (தேறிய) முறையே அமெரிக்க டொலர் 938 மில்லயன் மற்றும் 22 மில்லியன் மிகை மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் 585 மில்லியன் மிகை ஆகிய நிலுவைகளின் திரண்ட பெறுபேறாகும் (16வது அட்டவணை).

## சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கு

சென்மதி நிலுவைப் பதிவேட்டில் பொருட்கள் கணக்குக்கு உரிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் தொடர்பாக மேலே குறிப்பிட்டுள்ளோம். சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கில் 6 துறைகள் உள்ளடங்குகின்றன.

1. போக்குவரத்து
2. உல்லாசப் பிரயாணம்
3. தொலைத் தொடர்புச் சேவை
4. காப்புறுதிப் பணிகள்
5. ஏனைய தொழில் முயற்சிப் பணிகள்
6. ஏனைய இடங்களில் குறிப்பிடப்படாத அரச செலவுகள்

2001 ஆம் ஆண்டில் இக் கணக்கைத் தழுவியதாக நடைபெற்ற முக்கியமான சம்பவங்கள் வருமாறு:

- 2001 ஜுலை மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக அழிவுக்குள்ளான விமானங்கள் சார்பாகக் கிடைத்த அமெரிக்க டொலர் 90 மில்லியன் காப்புறுதி நட்டஈடு பணிகள் கணக்கின் காப்புறுதிப் பணிகளின் கீழ் வந்தமை. காப்புறுதிப் பணிகளின் (தேறிய) பெறுமதி அதிகரித்தமை.
- இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக உல்லாசப் பிரயாண உழைப்பு 16% வீதத்தால் குறைவடைந்ததன் காரணத்தினால் உல்லாசப் பிரயாணத் துறை தேறிய நிலுவை அமெரிக்க டொலர் 32 மில்லியன் எதிர்க்கணியப் பெறுமதியைக் காட்டியமை.
- வெளிநாட்டு வர்த்தகம் வீழ்ச்சியுற்றதன் காரணமாக போக்குவரத்துப் பணிகளின் வருமானம் 9% வீதத்தால் குறைவடைந்தமை.

16வது புள்ளிவிபர அட்டவணை

**இலங்கையின் சென்மதி நிலுவை 2001**

| விடயம் | | பெறுமதி (அமெரிக்க டொலர் மில்லியன்) |
|---|---|---|
| A. பொருட்கள் கணக்கு | | |
| 1. ஏற்றுமதிகள் | 4,817 | |
| 2. இறக்குமதிகள் | (5,974) | |
| 3. சந்தை நிலுவை (1-2) | | (-1,157) |
| B. பணிகள் கணக்கு | | |
| 4. வரவு | 1,267 | |
| 5. கொடுப்பனவுகள் | (1,159) | |
| 6. சேவைகள் கணக்கின் தேறிய நிலுவை (4-5) | | +108 |
| C. வருமானக் கணக்கு | | |
| 7. வரவு | 93 | |
| 8. கொடுப்பனவுகள் | 374 | |
| 9. வருமானக் கணக்கின் தேறிய நிலுவை (7-8) | | (281) |
| D. பொருட்கள், பணிகள் மற்றும் வருமானம் (தேறிய) (A+B+C) | | (1,330) |
| E. நடைமுறை மாற்றல்கள் கணக்கு | | |
| 10. தனியார் மாற்றல்கள் (தேறிய) | 938 | |
| 11. அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 22 | |
| 12. நடைமுறை மாற்றல்கள் நிலுவை (10-11) | | 960 |
| F. நடைமுறைக் கணக்கின் நிலுவை (D+12) | | (370) |
| G. மூலதன, நிதியியல் கணக்கு | | |
| மூலதனக் கணக்கு - மூலதன மாற்றல்கள (தேறிய) | | 197 |
| நிதியியல் கணக்கு | | 389 |
| (வெளிநாட்டு நேரடி முதலீடுகள் | | |
| தனியார் வரவு | | |
| தனியார் நீண்டகாலக் கடன்கள் (தேறிய) | | |
| அரச நீண்டகாலக் கடன்கள் (தேறிய) | | |
| குறுகியகாலக் கடன்கள் (தேறிய) | | |
| H. பிழைகளும் தவறுகளும் | | 5 |
| I. மொத்த நிலுவை | | +220 |
| J. நாணய அசைவுகள் | | - 220 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கு

வருமானக் கணக்குக்கு முக்கியமாக ஊழியர் கொடுப்பனவுகள் உரித்தாகின்றன. இங்கு ஊழியர் கொடுப்பனவுகளின் கீழ் ஊழியர் சம்பளம், அறிவுரைச் சேவைக் கட்டணங்கள், அதாவது, வெளிநாட்டுத் தூதுவராலயங்களின், சர்வதேச அமைப்புக்களின் சேவைகள் மற்றும் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் இதில் அடங்குகின்றன. இதன் தேறிய நிலுவை 2001 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் -2 மில்லியனாகும். நேரடி முதலீடுகளுக்கான இலாபங்கள் மற்றும் இலாபப் பங்குகளைக் கொண்ட நேரடி முதலீட்டு வருமானத் (தேறிய) தொகை 2001 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 102 மில்லியன் எதிர்க்கணியப் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2001 ஆம் ஆண்டில் வட்டிக் கொடுப்பனவுகள், வட்டி வரவுகளைவிட, அதிகரித்து அமெரிக்க டொலர் 176 மில்லியன் பற்றாக்குறையொன்றை, வட்டி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் அறிக்கையிட்டது.

### நடைமுறை மாற்றல்கள்

இதில் பிரதானமாக நடைமுறை தனியார் மாற்றல்கள் மற்றும் நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள் என இரு விதமான மாற்றல்கள் உள்ளடங்குகின்றன. இங்கு தனியார் மாற்றல்கள் எனப்படுவது, வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்கள் இந்நாட்டுக்கு அனுப்புகின்ற வெளிநாட்டுப் பண அனுப்பல்களாகும். இப் பணத்தொகையில் 62% வீதமானவை மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்ற ஊழியர்களிடமிருந்து கிடைக்கின்றன. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு நாடுகளிலிருந்து 14% வீதமும், வட அமெரிக்காவிலிருந்து 7% வீதமும் தென் கிழக்கு ஆசியாவிலிருந்து 5% வீதமும் ஏனைய நாடுகளான தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா,தென்னாசியா, தூரகிழக்கு ஆசியா ஆகிய வலயங்களிலிருந்து 12% வீதமும் கிடைக்கின்றன. 2001 ஆம் ஆண்டில் தனியார் மாற்றல்களின் (தேறிய) வரவுகள் 1% வீதத்தால் குறைவடைந்து அமெரிக்க டொலர் 935 மில்லியனாயிருந்தது. இக் குறைவுக்குக் காரணமாயிருந்த முக்கிய விடயங்களிடையே குறைந்த மட்டத்திலிருந்த எண்ணெய் விலையின் காரணமாக எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் வருமானம் குறைவடைந்தமை, மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் நிலைப்பாடின்மை நிலவியமை என்பவற்றைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், 2001 ஆம் ஆண்டில் இலங்கைக்குக் கிடைத்த தனியார் மற்றும் அலுவல்சார் மாற்றல்களின் தேறிய பெறுமதி அமெரிக்க டொலர் 959 மில்லியனாயிருந்தது.

## சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு

பொருட்கள் கணக்கு, பணிகள் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் நடைமுறை மாற்றல்கள் கணக்குகளின் தேறிய நிலுவைகளின் கூட்டுத்தொகை சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை எனக் குறிப்பிடப்டுகின்றனது. 2001 ஆம் ஆண்டில் இக்கணக்கின் நிலுவை அமெரிக்க டொலர் 370 மில்லியன் பற்றாக்குறை யொன்றைக் காட்டுகின்றது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றபோது 2.4% வீதமாகும். நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை, மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் நேர்கணிய நிலுவையைப் பயன்படுத்தியே அடைக்கப்படுகின்றது.

## சென்மதி நிலுவையின் மூலதன மற்றும் நிதியியல் கணக்கு

இது பிரதானமாக இருவகைப் படுகின்றது. ஒன்று, மூலதனக் கணக்காகும். இதில் மூலதன மாற்றல்களே உள்ளடங்குகின்றன. அதாவது, அரசாங்கத்தினால் கருத்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட மாற்றல்களும் வெளிநாடுகளில் வசிக்கின்ற வர்களால் (குடிபெயர்ந்தோர்) வீடு மற்றும் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட வரவுகள் போன்ற, அவர்கள் புதிதாகக் குடியேறிய நாடுகளில் செய்கின்ற மாற்றல்களுமே உள்ளடங்குகின்றன. மூலதனக் கணக்கின் தேறிய பெறுதி 2001 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 197 மில்லியனாகும்.

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்குத் தொடர்பாக ஆராய்கின்றபோது ஒரு சில பண்புகளை இனங் காணக்கூடியதாயுள்ளது.

- அரசாங்கத்துக்குக் கிடைத்த கடன் மூலதனம் அதிகரித்ததன் மூலம் மூலதன மற்றும் நிதியியல் வரவுகளில் வளர்ச்சியொன்று நடைபெற்றமை.
- வர்த்தக வங்கிகளில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியுற்றமை.
- தேறிய நீண்டகால தனியார் மூலதனம் வீழ்ச்சியுற்றமை.
- வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (தேறிய) கடுமையாக வீழ்ச்சியுற்றமை.
- வெளிநாட்டு தனியார் மயமாக்கல் வரவுகளில் அதிகரிப்பொன்றைக் காட்டியபோதிலும், இது எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் கிடைக்காமை.
- பங்குச் சந்தை வெளிநாட்டு முதலீடுகளின் (நானாவித முதலீடுகள்) தேறிய பெறுமதி முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்தமை.

## மூலதனக் கணக்கைத் தளர்த்துதல்

மூலதனக் கணக்கு தளர்த்தப்படுதல் வேண்டுமா? இல்லையா? என்பது நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டதொரு விடயமாகும். எவ்வாறாயினும் இலங்கை ஏற்கெனவே மூலதனக் கணக்கை ஓரளவு திறந்துவிட்டுள்ளது. வர்த்தக வங்கிகளுக்கு வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் (NRFC) பேணி வருவதற்கு இடமளித்துள்ளமை, வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகளை (FCBUs) நிறுவுவதற்கு இடமளித்துள்ளமை, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் (Quoted Companies) வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் 40% தொடக்கம் 100% வீதம் வரை முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கியமை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றபோது விதிக்கப் பட்டிருந்த 100% வீத ஒப்படை வரியை நீக்கியமை, பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளை இலகுபடுத்தும் பொருட்டு பங்கு முதலீடு தொடர்பான வெளிவாரி ரூபாய் கணக்கைப் (SIERA) பேணி வருவதற்கு அனுமதி வழங்கியமை, வர்த்தக வங்கிகளுக்கு அவர்களுடைய மூலதன மற்றும் ஒதுக்கப் பெறுமதியில் 15% வீதம் வரை வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கியமை, இலங்கை அபிவிருத்தி முறிகளை வெளியிட்டமை (டொலர் முறிகள்), நேரடி வெளிநாட்டு முதலீட்டு மட்டுப்பாடுகள் உரிய சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய முழுமையாக நீக்கப்பட்டமை ஆகியவற்றை மூலதனத் தளர்வு நடவடிக்கைகளாகக் குறிப்பிடலாம். ஆயினும், இற்றைவரை தனியார் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுதல், வதிவோர் வெளிநாடுகளில் முதலீடுகளைச் செய்தல், தனியார் துறையினால் வெளியிடப்படுகின்ற கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் முறிகளில் வதிவற்றோர்கள் முதலீடு செய்தல் ஆகியன மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மூலதனக் கணக்கு மழுமையாகத் திறந்து விடப்பட்டமை உள்நாட்டு நிதியியல்துறையின் அபிவிருத்திக்காகச் சந்தையை ஊக்குவிப்பதற்கு, ஒழுங்கான பேரண்டப் பொருளாதார முகாமைத்து வமொன்றை ஏற்படுத்துவதற்கு, மூலதனம் சுதந்திரமாக நாடுகளுக்கிடையே பரிமாற்றப் படுவதற்கு, மேலதிக சேமிப்புக்களை ஏனைய நாடுகளில் முதலீடு செய்வதற்கு அல்லது பற்றாக்குறைச் சேமிப்புகளுக்கு நிதியிடுவதற்கு உதவியாயுள்ளது.

ஆயினும், மூலதனக் கணக்கை முழுமையாகத் திறந்து விடுவதற்குத் தேவையாயுள்ள முன்னேறுகின்ற நாடுகள் (இலங்கையைப் போன்ற) இதைத் திறந்து விடுவதற்கு முன்னர் பேரண்டப் பொருளாதார உறுதி நிலையை ஏற்படுத்துதலும் போட்டிநிலை மற்றும் செயற்றிறனுள்ள நிதியியல் முறைமையொன்றை ஏற்படுத்துதலும் முதலில் நிறைவேற்ற வேண்டிய இரண்டு தேவைளாகுமெனச் சுட்டிக்காட்டலாம்.

## சென்மதி நிலுவையின் மொத்த நிலுவை மற்றும் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள்

இலங்கையின் சென்மதி நிலுவையின் இறுதி நிலுவை மொத்த நிலுவையாகும். வேறு விதத்தில் கூறுவதாயின், வெளிநாட்டுக் கணக்குகளின் நிலுவையில் தேறிய அலுவல்சார் ஒதுக்குகளின் மாற்றமடைகின்ற தொகைகளின் மூலம் காட்டப்படுவது மொத்த நிலுவையாகும். மொத்த நிலுவையில் பற்றாக்குறையொன்று ஏற்படுமிடத்து இந்தத் தேறிய அலுவல்சார்செலாவணி ஒதுக்குகள் குறைவடைகின்றன. மொத்த நிலுவையில் மிகையொன்று ஏற்படுமிடத்து இந்தத் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிக்கின்றன.

தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் எனக் குறிப்பிடப்படுவது, அரசாங்கத்திடமும் (அரச முகவர் நிறுவனங்கள் உட்பட) மத்திய வங்கியிடமும் உள்ள வெளிநாட்டுச் சொத்துக்களின் தேறிய பெறுமதியாகும். 2000 ஆம் ஆண்டில் பாரதூரமான விதத்தில் தேறிய அலுவர்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தன. தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்யடைவதன் மூலம் பொருளாதார எதிர்விளைவுகள் பல உருவாகின்றன. நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதி மீதிலான நம்பிக்கை குறைவடைதல், நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி மீதிலான நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்படுதல், வெளிநாட்டுக் கடன்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டியேற்படுதல், (உதாரணமாக - இலங்கை 2001 ஏப்ரில் மாதத்தில் சிஎஉ (SDR) 103 மில்லியன் நெருங்கிய கடன் வசதியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றமை) நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்யவேண்டி ஏற்படுதல், ஏற்றுமதியாளர்கள் தமது உழைப்புக்களை நாட்டினுள் எடுத்துவருவதைத் தாமதிப்பதனாலும் இறக்குமதிக் கொடுப்பனவுகளைத் துரிதமாகச் செலுத்துவதனாலும் குறுகியகால மூலதனப் பாய்ச்சல் அதிகரித்தல், பெரும்பாலும் நிதியியல் பிரச்சினையொன்றை நோக்கிச் செல்லல், அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைதலின் பொருளாதார எதிர் விளைவுகளாகும். எவ்வாறாயினும், 2001 ஆம் ஆண்டில் அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்தன. இதற்கான காரணங்கள் வருமாறு:

- இறக்குமதி மீதான கேள்வி வீழ்ச்சியடைந்தமை.
- சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யினதும் ஏனைய உற்பத்திகளினதும் விலைகள் வீழ்ச்சியடைந்தமை.
- நெருங்கிய கடன் வசதிகளின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன் கிடைத்தமை.
- ரூபா சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டமை.
- உள்நாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து இலங்கை மத்திய வங்கி குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தமை.
- அமெரிக்க டொலரை அடிப்படையாகக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளியிடப்பட்டமை.

ஒரு நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்கின் முக்கியத்துவத்தை அளவிடுகின்ற அளவுகோல் யாதெனில், இச் சொத்துக்களின் மூலம் கொள்வனவு செய்யக்கூடிய இறக்குமதி மாதங்களாகும். இதனை மொத்த அலுவல்சார் ஒதுக்குளின் இறக்குமதிச் சாத்தியம் எனவும் குறிப்பிடுகின்றோம். 2001 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்த மொத்த அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள், 2001 இல் 2.7 மாதகால இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்குப் போதுமானதாயிருந்தன. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் (மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் + வர்த்தக வங்கிகளிடமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள்) 4.5 மாதகால இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கே போதுமானதாயிருந்தன.

## வெளிநாட்டுப் படுகடன் பணி வீதம்

வெளிநாட்டுப் படுகடன் பணிகள் வீதம் என்பது, வெளிநாட்டுக் கடன் தவணைப் பணங்களையும் அதற்கான வட்டியையும் அதாவது வெளிநாட்டுப் படுகடன் பணிகளை, வெளிநாட்டு உழைப்புக்களின் நூற்றுவீதமாகக் காட்டுவதாகும். இங்கு வெளிநாட்டு ஏற்றுமதி உழைப்புக்களைப் போன்றே பொருட்கள், பணிகள் வருமானம் மற்றும் தனியார் மாற்றல்களின் உழைப்புக்களையும் கருதலாம். பொருட்கள் மற்றும் பணிகள் உழைப்புக்களின் நூற்றுவீதமாகக் கொள்ளப்படுகின்றபோது 2001 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடன் பணிகளின் வீதம் 12.7% வீதமாயிருந்ததோடு, பொருட்கள், பணிகள், வருமானம் மற்றும் தனியார் மாற்றல்கள் உழைப்பின் நூற்றுவீதமாகக் கொள்ளப்படுகின்றபோது 10.6% வீதமாகும். மொத்தக் கடன் தொகையில் கூடுதலான தொகை நிவாரண நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்டுள்ளதால் இன்றுள்ள படுகடன்பணிகள் பிரச்சினையாயிராதபோதிலும், நிவாரணமற்ற கடன்கள் அதிகரிக்கக்கூடிய போக்கு முக்கியமான இரண்டு தேவைகளை வலியுறுத்தி நிற்கின்றன. ஒன்று, முன்னெச்சரிக்கைக் கடன் முகாமைத்துவத்தின் அவசியமாகும். மற்றையது, வினைத்திறனுடன் கூடிய வளப் பகிர்ந்தளிப்பின் அவசியமாகும்.

## வெளிநாட்டுச் செலாவணி வீதம்

உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதிக்கு வெளிநாட்டுச் செலாவணி வீதம் என வரைவிலக்கணம் கூறலாம். 2001 ஆம் ஆண்டினுள் இலங்கை ரூபா யப்பான் யென்னைத் தவிர ஏனைய பிரதான நாணயங்களின் எதிரே மதிப்பிறக்கம் அடைந்தது. ரூபா, பிரதான நாணயங்களுக்கு எதிராக மதிப்பிறக்கமடைந்த நூற்று வீதம் பின்வருமாறு:

**வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்**

| நாணய வகை | ஆண்டு இறுதி | வீதம் | வீழ்ச்சியடைந்த நூற்று வீதம் |
|---|---|---|---|
| ஜர்மன் மார்க் | 35.76 | 40.90 | 6.7 |
| பிரான்ஸ் பிராங்க் | 10.66 | 12.19 | 6.7 |
| பிரித்தானிய பவுண் | 114.78 | 128.66 | 0.8 |
| அமெரிக்க டொலர் | 75.78 | 89.38 | 11.3 |
| சிஎஉ (SDR) | 99.90 | 113.75 | 7.9 |
| இந்திய ரூபா | 1.68 | 1.89 | 8.2 |

*17 வது புள்ளிவிபர அட்டவணை*

**1981 மற்றும் 2001 குடித்தொகை மற்றும் வீடமைப்புத் தொகை மதிப்பீட்டிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்**

| | 1981 | 2001 |
|---|---|---|
| 1. குடித்தொகை (மில்லியன்கள்) | | |
| 18 மாவட்டங்களில் (அ) | 13.1 | 16.8 |
| 7 மாவட்டங்களில் (ஆ) | 1.7 | 1.9 |
| அனைத்து மாவட்டங்களிலும் | 14.8 | 18.7 |
| 2. ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் (%) | 1.6 | 1.2 |
| 3. பால் பரம்பல் வீதம் (100 பெண்களுக்கு ஆண்கள்) | 103.9 | 97.9 |
| 4. வயதுகளுக்கு ஏற்ப பரம்பல் (%) | | |
| 18 வயதுக்குக் கீழ் | 41.6 | 32.9 |
| 18 வயதும் அதற்கு மேலும் | 58.4 | 67.1 |

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) 1981 மற்றும் 2001 ஆம் ஆண்டு தொகை மதிப்புகளின்போது முழுமையாகக் கணக்கிடப்பட்டது.

(ஆ) 1981 ஆம் ஆண்டு தொகை மதிப்பின்போது முழுமையாகக் கணக்கிடப்பட்டதோடு, 2001 ஆம் ஆண்டு தொகை மதிப்பின் போது பகுதிவாரியாகக் கணக்கிடப்பட்டது.

# குடித்தொகை மற்றும் தொழிற்படை

## குடித்தொகை (Population)

2001 ஆம் ஆண்டில் இலங்கையின் குடித்தொகைப் பரம்பல் தகவல்கள் தொடர்பான மிக முக்கியமானதொரு சாதனை யாதெனில், ஆண்டின் நடுப்பகுதியில் தொகை மதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2001 குடித்தொகை மற்றும் வீடமைப்புப் பற்றிய தொகை மதிப்பீடு நடத்தப்பட்டமையாகும். 1981 இல் நடத்தப்பட்ட இறுதித் தொகை மதிப்பீட்டுக்கு 20 வருடங்களுக்குப் பின்னர் நடத்தப்பட்ட 2001- தொகை மதிப்பின் மூலம் நாட்டின் குடித்தொகைப் பரம்பல் தொடர்பான மிகவும் முக்கியமான பல தகவல்கள் திட்டமிடல் மற்றும் கொள்கை வகுப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன்படி 2001 - தொகை மதிப்பின் மூலம் மதிப்பிடப்பட்ட மொத்தக் குடித்தொகை 18.7 மில்லியானிருந்ததோடு, 1981 இல் இருந்து 2001 வரையிலான காலகட்டத்தினுள் சராசரி வருடாந்த குடித்தொகை வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 1.2 வீதமாயிருந்தது. குறிப்பிட்ட 20 வருடங்களினுள் இலங்கையில் உருவான சமூக, பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் காரணமாக, பிரதேச குடித்தொகைப் பரம்பலில் மாற்றங்கள் ஏற்பட்டதோடு, இதன்படி ஒரு சில மாவட்டங்களின் குடித்தொகை வளர்ச்சி வேகம் முழுக் குடியத்தொகை வளர்ச்சி வேகத்தைவிட அதிகரித்ததொரு மட்டத்திற்கு வந்தது (17 மற்றும் 18 வது புள்ளிவிபர அட்டவணைகளைப் பார்க்கவும்). மேலும், குடித்தொகையில் முதிர்ந்தோரின் அதிகரிப்பு மற்றும் பால் விகிதத்தில் (குடித்தொகையில் 100 பெண்களுக்கு ஆண்களின் எண்ணிகை) வீழ்ச்சி என்பவற்றை 2001 குடித்தொகை மதிப்பின் மூலம் தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளது. இத்தொகை மதிப்பீட்டுப் பெறுபேறுகளின் மூலம் மாவட்டங்களுக்கு இடையே உள்ள பொருளாதார ரீதியிலான முரண்பாடுகளைக் குறைப்பதற்கான கொள்கை வகுத்தலின் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், முதிர்ந்தோர்களின் சமூகப் பாதுகாப்புத் தேவைத் துறைகளினுள் போதியளவு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தாதிருப்பின் அதனூடாக அரசாங்கம் முகம்கொடுக்க வேண்டியேற்படுகின்ற கஷ்டங்கள் மேலும் அதிகரிக்கலாம்.

## கடந்த ஐந்து தசாப்தத்தினுள் இலங்கையின் குடித்தொகையில் சிறப்பாகக் காணக்கூடியதாயுள்ள பண்புகள்

இறுதித் தொகை மதிப்பீட்டு இரவன்று கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களினுள் இருந்த மொத்தக் குடித்தொகை 16,864,687 ஆகும். இதன்படி 1981 - தொகை மதிப்பீட்டுக்கும் இத் தொகை மதிப்பீட்டிற்கும் இடைப்பட்ட காலத்தினுள் குடித்தொகையின் சராசரி ஆண்டு வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 1.2 ஆக இருந்தது. இதன் மூலம் 1960 ஆம் தசாப்தத்திலிருந்து இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வேகத்தில சீரானதொரு வீழ்ச்சிப் போக்கொன்று தொடர்ந்தும் இருந்துவருகின்றதென்பது உறுதியாகிறது. 1963 - தொகை மதிப்பீட்டின்போது குடித்தொகையின் வளர்ச்சி வேகம் 2.7 வீதமாயிருந்ததோடு, இது 1971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18வது புள்ளிவிபர அட்டவணை

**2001 தொகை மதிப்பின்போது கணக்கிடப்பட்ட குடித்தொகை**

| | மாவட்டம் | கணக்கிடப்பட்ட குடித்தொகை 1981 தொகை மதிப்பீடு | கணக்கிடப்பட்ட குடித்தொகை 2001 தொகை மதிப்பீடு | ஆண்டுச் சராசரி வளர்ச்சி வேகம் 1981 - 2001 |
|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 1,699,241 | 2,234,289 | 1.3 |
| 2. | கம்பஹா | 1,390,862 | 2,066,096 | 1.9 |
| 3. | களுத்துறை | 829,704 | 1,060,800 | 1.2 |
| 4. | கண்டி | 1,048,317 | 1,272,463 | 1.0 |
| 5. | மாத்தளை | 357,354 | 442,427 | 1.1 |
| 6. | நுவரெலியா | 603,577 | 700,083 | 0.7 |
| 7. | காலி | 814,531 | 990,539 | 1.0 |
| 8. | மாத்தறை | 643,786 | 761,236 | 0.8 |
| 9. | அம்பாந்தோட்டை | 424,344 | 525,370 | 1.1 |
| 10. | அம்பாறை | 388,970 | 589,344 | 2.0 |
| 11. | குருநாகல் | 1,211,801 | 1,452,369 | 0.9 |
| 12. | புத்தளம் | 492,533 | 705,342 | 1.8 |
| 13. | அனுராதபுரம் | 587,929 | 746,466 | 1.2 |
| 14. | பொலநறுவை | 261,563 | 359,197 | 1.6 |
| 15. | பதுளை | 640,952 | 774,555 | 0.9 |
| 16. | மொனறாகல | 273,570 | 396,173 | 1.8 |
| 17. | இரத்தினபுரி | 797,087 | 1,008,164 | 1.2 |
| 18. | கேகாலை | 684,944 | 779,774 | 0.6 |
| | உபமொத்தம் (அ) | 13,151,065 | 16,864,687 | 1.2 |
| | ஏனைய ஏழு மாவட்டங்களும் உப மொத்தம் (ஆ) | 1,695,685 | 1,867,568 | 0.5 |
| | மொத்தம் | 14,846,750 | 18,732,255 | 1.2 |

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) இந்தப் 18 மாவட்டங்களும் முழுமையாகக் கணக்கிடப்பட்டன.

(ஆ) இந்த ஏழு மாவட்டங்களும்: மட்டக்களப்பு (12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 5 பிரிவுகள் மட்டும் முழுமையாகக் கணக்கிடப்பட்டனவென்பதோடு, 6 பிரிவுகள் பகுதிவாரியாகக் கணக்கிடப்பட்டன.) திருகோணமலை (11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 7 பிரிவுகள் முழுமையாகக் கணக்கிடப்பட்டனவென்பதோடு, 2 பிரிவுகள் பகுதிவாரியாகக் கணக்கிடப்பட்டன.) மன்னார் (5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1 பிரிவு மட்டும் பகுதிவாரியாகக் கணக்கிடப்பட்டது.) வவுனியா (4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒன்று முழுமையாகக் கணக்கிடப்பட்டது.) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு (23 பிரதேச செயலாளர் பிரிவுகளில் எந்தவொரு பிரிவும் இறுதித் தொகை மதிப்புக்கு உள்ளாக்கப்படவில்லை.)

குடித்தொகை மதிப்பபின்போது 2.3 வீதம் வரையிலும், 1981 தொகை மதிப்பின்போது 1.6 வீதம் வரையிலும் மேலும் வீழ்ச்சியுற்றது. மேற்குறிப்பிட்ட 18 மாவட்டங்களின் மொத்தக் குடித்தொகையும் பகுதிவாரியாகக் கணக்கிடப்பட்ட எஞ்சிய 7 மாவட்டங்களிலும் இருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கும் ஏற்ப இலங்கையின் 2001 ஆம் ஆண்டுக்கான குடித்தொகை 18.73 மில்லியனாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி மொத்தக் குடித்தொகையின் ஆண்டு வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 1.2 வீதமாகும் (19வது புள்ளிவிபர அட்டவணை). இவ்வாறானதொரு குறைந்த வளர்ச்சி வீதமொன்று

19 வது புள்ளிவிபர அட்டவணை

**குடிப்பரம்பல் 1971, 1981, 2001**

| | ஆண்டு 1971 | ஆண்டு 1981 | ஆண்டு 2001 |
|---|---|---|---|
| குடித்தொகை ('000) | 12,690 | 14,847 | 18,732 |
| வள்ர்ச்சி வீதம் | 2.3 | 1.6 | 1.2 |
| குடித்தொகை அடர்த்தி (சதுர கிலோ மீற்றருக்கு குடித்தொகை) | 196 | 230 | 299 |
| பெண்/ஆண் விகிதம் | 106 | 103.9 | 97.9(அ) |
| 18 வயதுக்குக்குக் கீழுள்ளோர் வீதம் | 49.6 | 41.6 | 32.9(அ) |
| 18 வயதுக்கு மேலுள்ளோர் வீதம் | 50.4 | 58.4 | 67.1(அ) |

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

அறிக்கையிடப்படுவதற்கு, பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்லல், கடந்த 20 வருடங்களாக இருந்து வருகின்ற இனப் பிரச்சினையின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள். அதேபோன்று தொழில்களுக்காக நாட்டை விட்டு வெளியேறுதல் அதிகரித்தமை போன்ற விடயங்கள் காரணமாயிருந்திருக்கலாம்.

மாவட்டங்களுக்கிடையிலான குடித் தொகை வளர்ச்சி வீதங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களில் 6 இல் இவ் வீதங்கள் மொத்த வளர்ச்சி வீதமான 1.2 வீதத்தைத் தாண்டியிருந்தன. இம் மாவட்டங்கள் கொழும்பு, கம்பஹா, அம்பாறை, புத்தளம், பொலநறுவை, மொனறாகல ஆகும். இவற்றினிடையே கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உயர் வளர்ச்சி வீதமொன்று நிலவுவதற்குப் பெரும்பாலும் இவ்விரு மாவட்டங்களினுள்ளும் பொருளாதாரத் தொழிற்பாடுகள் உயர் மட்டத்தில் விளங்கியமையும் அதேபோன்று தொழில்களுக்காகவும் ஏனைய பொருளாதார ரீதியிலான காரணங்களை முன்னிட்டும் ஏனைய மாவட்டங்களிலிருந்து இம் மாவட்டங்களுக்கான குடித்தொகையின் புலம்பெயர்வும் காரணமாய் இருக்கலாம். எஞ்சிய நான்கு மாவட்டங்களில் உயர் வளர்ச்சி வீதமொன்று நிலவுவதற்கு, பெரும்பாலும் வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து அதனை அண்மிய தாயுள்ள இந் நான்கு மாவட்டங்களுக்கும் குடித்தொகை கூடுதலாக வந்தடைந்தமை காரணமாக இருக்கலாம்.

பால் விகிதம் அதாவது குடித்தொகையில் 100 பெண்களுக்கு ஆண்களின் விகிதம், 1946 இல் 113 ஆக இருந்ததோடு, இது 1981 இல் 104 ஆகவும், 2001 இல் 98 ஆகவும் ஒரு சீராகக் குறைந்தது. பெண் குடித்தொகை விகிதாசாரம் அதிகரித்தமை பெரும்பாலும் அண்மிய காலங்களில் பெண்களின் தொழிற்படை விகிதத்தில் அதிகரிப்பு மூலமும் பிரதிபலித்தது.

இனப்பெருக்க வீதம் விரைவாகக் குறைந்து வருகின்றமை இலங்கையின் குடித்தொகைப் பரம்பலில் நீண்டகால ரீதியில் காணக்கூடியதாயுள்ள மிக முக்கியமானதொரு பண்பாக மாறியுள்ளது. மொத்த இனப்பெருக்க வீதம் (மொ.இ.வீ.) அதாவது, பெண் ஒருவருக்குச் சராசரியாகக் கிடைக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 1953 இல் 5 பேர் அளவிலானதொரு உயர் பெறுமானத்திலிருந்து 1981 ஆகும்போது 3 வரையிலானதொரு பெறுமானத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 1982 - 97 காலகட்டத்தினுள் இது 2.8 ஆகவும், 1995 - 2000 காலகட்டத்தினுள் 2.0 வரையிலுமான பெறுமானத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இதனூடாக பெரும்பாலும் நீண்டகால ரீதியில் மிகவும் சிறப்பான பொருளாதார விளைவுகள் பலவற்றை அடையக் கூடியதாயிருக்கும். குறிப்பாக பெண்களுக்கு வருமானம் உழைப்பதை நோக்கி மேலும் முன்னேறுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதால் குடும்பச் செலவில் பிள்ளைகளைப் பேணிக் காப்பதற்குச் செலவழிக்கப்படுகின்ற செலவுகள் விகிதாசார ரீதியல் குறைவடைதலின் மூலம் கல்விக்கான செலவுகளை அதிகரிக்கவும் அதனூடாக தனிநபர் மனித மூலதன முதலீட்டை அதிகரிக்கச் செய்யவும் முடியுமாவதோடு, அதன் மூலம் வாழ்க்கைத் தரம் மிகவும் சிறப்பான நிலையை அடையும்.

ஏனைய பெரும்பாலான நாடுகளைப் போன்று இலங்கையிலும் மொத்தக் குடித்தொகை வயது முதிர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. 1963 வரை 65 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகை வீதம் 3.6 ஆக இருந்ததோடு, 1971 இல் இது 4.2 ஆகவும் 1981 இல் 5.4 ஆகவும் அதிகரித்தது. 2001 தொகை மதிப்பீட்டின்படி இவ்வீதம் மேலும் அதிகரித்து 7 வரையிலான பெறுமான மொன்றைப் பெற்றுள்ளது (9 வது வரைபடம்).

முழுமையாகக் கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களிலுமிருந்த 18 வயதுக்குக் குறைவான குடித்தொகை வீதம் துரிதமாகக் குறைவடையும் நிலையிலிருந்தது. 1981 குடித்தொகை மதிப்பின்போது ஐந்தில் இரண்டுக்கும் அதிகமாயிருந்த (41.6%) இவ் வீதம் 2001 ஆகும்போது மூன்றில் இரண்டு (32.9%) அளவு பெறுமானத்திற்கு வீழ்ச்சியுற்றது. இப் பெயர்ச்சியின் ஊடாக குடித்தொகைக் கூம்பில் வயது குறைந்தோரின் தொகுதிகளில் சுருக்கமொன்றைக் காணக்கூடியதாயுள்ளதோடு, இதற்குப் பெரும்பாலும 1980 ஆம் தசாப்தத்தில் ஏற்பட்ட இனப்பெருக்க வீதம் வீழ்ச்சியுற்றமை காரணமாயிருக்கக்கூடும்.

அம்பாறை மாவட்டத்தினுள் 18 வயதுக்குக் குறைந்த குடித்தொகை வீதம் அதிகூடிய பெறுமானமொன்றைப் (39.8%) பெற்றிருந்ததோடு, கொழும்பு மாவட்டத்தினுள் ஆகக் குறைந்த பெறுமானத்தை (27.1%) அறிவித்தது. கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களில் 14 இல் இவ் வீதம் பொதுச் சராசரிக்குக் கூடுதலான பெறுமானமொன்றைப் பெற்றிருந்ததோடு, எஞ்சிய 4 மாவட்டங்களில் மாத்திரம் இதற்காகக் குறைந்த பெறுமானமொன்றை அறிவித்தது. ஒப்பீட்டு ரீதியில் கூடுதலான மாவட்டங்கள் உயர் இளம் குடித்தொகையொன்றைக் கொண்டிருப்பதன் ஊடாக இம் மாவட்டங்களின் அபிவிருத்தி உபாயங்களில் இளம் வயதினரின் கூடுதலான பங்களிப்பு இருத்தல் வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைப்பதற்கு நிறுவனங்களால் முடியாதிருந்தது. இதன்படி பெரும்பாலான நிறுவனங்களால் தமது செலவுகளைக் குறைத்துக் கொண்டு தொடர்ந்து தொழில் முயற்சிகளில் நிலைத்திருப்பதற்கான தீர்வாக, ஊழியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஆகக் குறைந்த சம்பளமொன்றைச் செலுத்தி தமது வீடுகளில் தங்கியிருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக ஹோட்டல் துறைகளிலுள்ள தொழில் வாய்ப்புக்கள் ஏறத்தாழ 40,000த்தால் குறையுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும், 1971 ஆம்ஆண்டின் 45ஆம் இலக்க வேலையாட்களின் தொழில்நிலையை முடிவுறுத்தல் சட்டத்தின் காரணமாக அவ்வாறான தொழில் முடிவுறுத்தல்களின் தொகை குறைந்தளவே நடைபெற்றது. இதற்கிணங்க, பொருளாதாரத்தின் மந்தகதியிலான நிலைமைக்கேற்ப பிரதிபலிக்க வேண்டிய தொழிலிலுள்ளோர் குறைவடைதலுக்குப் பதிலாக பலவந்தமாகப் பேணிவரப்பட்ட தொழிலில் உள்ளோர் நிலையினை 2001 ஆம் ஆண்டினுள் காணக்கூடியதாயிருந்தது.

## தொழில் வாய்ப்பின்மையின் குறிப்பிடத்தக்க பண்புகள்

i. வயதுத் தொகுதிகளுக்கு ஏற்ப தொழிலில் உள்ளோரைப் பகுப்பாய்வு செய்கின்றபோது குறைந்த வயதுத் தொகுதிகளில் தொழிலிலுள்ளோர் சதவீதம் கூடிய மட்டத்தில் இருந்ததோடு, இது வயது மட்டம் அதிகரிப்பதைத் தொடர்ந்து படிப்படியாக குறைவடைந்து செல்கின்றது. குறிப்பாக, 15 - 19 வயது மற்றும் 20 - 29 வயதுத் தொகுதிகளில் தொழிலற்றோரின் அதிகரித்த நிலை கவனத்திலெடுக்கப்பட வேண்டியதொரு விடயமாயுள்ளதோடு, 2000 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பெறுமானங்கள் மொத்த தொழிலற்றோர் நூற்றுவீதத்தைவிட அதிகமாயிருந்தன. இதன்படி தொழில் வாய்ப்பின்மை இளைஞர்களின் பிரச்சினையாகும்.

ii. சாதாரண தரம் மற்றும் அதற்குக் கூடுதலான கல்வித் தகைமைகளுடன் கூடியவர்களின் தொழில் வாய்ப்பின்மை, குறைந்த கல்வி மட்டங்களையுடையவர்களின் தொழில் வாய்ப்பின்மையுடன் ஒப்பிடுகின்றபோது தொடர்ந்தும் மிகக் கூடுதலானதொரு மட்டத்தில் இருந்தது. பட்டதாரிகளைப் போன்றே பட்டதாரிகளல்லாத தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்போரிடமுள்ள திறமைகளுக்கும் எதிர்பார்க்கப்படும் திறமைகளுக்கும் இடையேயுள்ள பொருந்தாத் தன்மையின் காரணமாக இவர்களுக்கு தனியார் துறை தொழில் வாய்ப்புக்களையும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வது கடினமாயுள்ளது.

### முழுப் பொருளாதாரம் தொடர்பான முக்கியமான முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள் | 2000 | 2001 |
|---|---|---|
| 1. குடித்தொகை மற்றும் தொழிற்படை | | |
| • குடித்தொகை (மில்லியன்) (2001 தொகைமதிப்பை அடிப்படையாகக் கொண்டது) | 18.5 | 18.7 |
| • குடித்தொகை வளர்ச்சி வீதம் (%) | 1.4 | 1.4 |
| • தொழிற்படை (இலட்சம்) | 68 | 67 |
| • தொழிற்படை பங்கேற்பு வீதம் (%) | 50 | 48 |
| • தொழிலற்றோர் (தொழிற்படையில் %) | 7.6 | 7.8 |
| 2. உற்பத்திச் செயற்பாடுகள் | | |
| • மொத்தத் தேசிய உற்பத்தி (வர்த்தக விலை) (ரூபா மில்லியன்) | 1,233 | 1,377 |
| • தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி (அமெரிக்க டொலர்) | 881 | 823 |
| • உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி | 5.8 | -1.3 |
| • உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி | 6.0 | -1.4 |
| 3. முதலீட்டுச் செயற்பாடுகள் (மொ.உ.உ. நூற்று வீதமாக) | | |
| • மொத்த முதலீட்டு வீதம் (%) | 28 | 22 |
| • மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் (%) | 17 | 15 |
| • மொத்த தேசிய சேமிப்பு வீதம் (%) | 22 | 20 |
| 4. அரச நிதி புள்ளிவிபரங்கள் (மொ.உ.உ. நூற்று வீதமாக) | | |
| • மொத்த வரவுசெலவுப் பற்றாக்குறை (%) | -10 | -11 |
| • நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை (%) | -3 | -5 |
| • அரச வருமானம் (%) | 17 | 16 |
| • அரச செலவுகள் (%) | 27 | 27 |
| • அரச படுகடன் (%) | 97 | 104 |
| 5. வெளிநாட்டு வர்த்தகம் | | |
| • வர்த்தக வீதம் (1997 = 100) | 101.1 | 99.2 |
| • ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (1997 = 100) | 122.4 | 112.6 |
| • இறக்குமதி அளவுச் சுட்டெண் (1997 = 100) | 122.8 | 109.6 |
| • ஏற்றுமதி வளர்ச்சி வீதம் | 19.8 | 12.8 |
| • இறக்குமதி வளர்ச்சி வீதம் | 22.4 | 18.4 |
| • ஏற்றுமதி மொ.உ.உ. % வீதமாக | 33.3 | 30.7 |
| • இறக்குமதி மொ.உ.உ. % வீதமாக | 44.1 | 38.1 |
| 6. வெளிநாட்டு நிதி (பெறுமதி அமெரிக்க டொலர் மில்லியன்) | | |
| • வர்த்தக நிலுவை | -1,798 | -1,157 |
| • நடைமுறைக் கணக்கின் நிலுவை | -1,066 | -371 |
| • மொத்த நிலுவை | -522 | +220 |
| • வெளிநாட்டுச் சொத்துக்களின் சாத்திய நிலை (இறக்குமதி மாதங்கள்) | 3.5 | 4.5 |
| • மொத்தக் கடன் பணிகள் வீதம் (பொருட்கள் சேவைகள்) (இறக்குமதிப் பெறுமதியின் நூற்றுவீதமாக) | 14.7 | 13.3 |
| • மொத்த வெளிநாட்டுக் கடன்கள் மொ.உ.உ. % ஆக | 61.0 | 61.8 |
| • அமெரிக்க டொலர் 1 / ரூபா | 80.06 | 93.16 |
| • சிஎஉ (SDR) 1 / ரூபா | 104.31 | 116.97 |

Printed by : Atlanta Graphics, No. 62, 1st Floor, Super Market Complex, Borella, Colombo 08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org